


# வரலாறு
## நாளிதழ்

PUDUGAI VARALARU

www.varalaruu.com

ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351





திங்கள் ❖ ஜனவரி. 01, 2024 — சென்னை & புதுக்கோட்டை — 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 88 ❖ ரூ.10

## தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்மு காஷ்மீர் அமைப்புக்குத் தடை

# அமித் ஷா

## ஜம்மு காஷ்மீரை இந்தியாவில் இருந்து பிரித்து இஸ்லாமிய ஆட்சியை நிறுவ தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது:மத்திய அரசு



**புதுடெல்லி, ஜன. 1-**
தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்மு காஷ்மீர் அமைப்புக்குத் தடை விதித்து மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்மு காஷ்மீர் அமைப்பு சட்டவிரோதமானது என அறிவிக்கப்படுகிறது. இந்த அமைப்பு ஜம்மு காஷ்மீரை இந்தியாவில் இருந்து பிரித்து இஸ்லாமிய ஆட்சியை நிறுவ தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிராக பிரச்சாரங்களைச் செய்வது, பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கில் ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது ஆகியவற்றில் இந்த அமைப்புக்கு தொடர்பு உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பயங்கரவாதத்துக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மையைக் கொண்டிருக்கிறது. இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் எந்த ஒரு தனி நபரோ, அமைப்போ ஈடுபட்டால் உடனடியாக முறியடிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்மு காஷ்மீர் அமைப்பு சையத் அலி ஷா கிலானியால் கடந்த 2004ல் தொடங்கப்பட்டது. பாகிஸ்தான் ஆதரவாளராகவும், காஷ்மீரி ஜிகாதி குழுக்களின் தலைவராகவும் கருதப்படும் இவர், ஜமாத் இ இஸ்லாமி காஷ்மீர் அமைப்பில் இருந்து விலகியதை அடுத்து, தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்முகாஷ்மீர் அமைப்பை தொடங்கினார். சையத் அலி ஷா கிலானியின் மறைவுக்குப் பிறகு அந்த அமைப்பின் தலைவராக மசரத் ஆலம் பட் பொறுப்பேற்றார். அவரும், இந்திய எதிர்ப்பு மற்றும் பாகிஸ்தானிய ஆதரவுக்குப் பெயர் பெற்றவர். தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பதும், அவரது முஸ்லிம் லீக் ஜம்மு காஷ்மீர் கட்சி கடந்த 27ம் தேதி தடை செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "ஆளுநர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளேன் என்பது தவறான செய்தி" – தமிழிசை விளக்கம்



ஹைதராபாத், ஜன. 1-
தனது ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யப் போவதாக வெளியான தகவல்களுக்கு தமிழிசை சௌந்தரராஜன் விளக்கம் அளித்துள்ளார்.

தெலங்கானா மற்றும் புதுவை மாநில கவர்னராக இருக்கும் தமிழிசை சௌந்தரராஜன் தனது பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக சமூக வலைதளங்களில் செய்திகள் பரவி வருகின்றன. அவர் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மக்களவைத் தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட போவதாகவும் கூறப்பட்டது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர் பாஜக வேட்பாளராக தூத்துக்குடி நாடாளுமன்றதொகுதியில் போட்டியிட்டார். அங்கு திமுக வேட்பாளர் கனிமொழியிடம் சில லட்சங்கள் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றார்.

அதைத்தொடர்ந்து அவர் புதுவைக்கு துணை நிலை ஆளுநராக நியமிக்கப்பட்டார். அத்துடன் தெலுங்கானா மாநிலஆளுநராகவும்அவர் நியமிக்கப்பட்டார். இந்த இரண்டு மாநிலங்களிலும் அவர் ஆளுநராக பணியாற்றிவரும்நிலையில் நாடாளுமன்ற தேர்தல் நெருங்கியுள்ளதால் தனது ஆளுநர் பதவியை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் தூத்துக்குடி தொகுதியில் பாஜக வேட்பாளராக போட்டியிடப் போவதாக செய்திகள் பரவி வருகின்றன.

இந்த நிலையில் இதுகுறித்து ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் விளக்கம் அளித்துள்ளார். 'நான் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளேன் என்ற செய்தி தவறானது.மேலிட உத்தரவு என்னமோ அதைத்தான் நான் செய்து வருகிறேன். நான் எப்போதும் மக்களுக்காக இருப்பேன். பிரதமர்மோடி மற்றும்ஸ்ரீ ராமரின் தயவால் நான் எனது மனசாட்சிப்படி பணியாற்றி வருகிறேன். எனவே கவர்னர் பதவியை ராஜினாமா செய்வேன் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

எனினும் ஆளுநர் பதவியை விட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தமிழிசை ஆசைப்படுவதாகவும், அதனால் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாக அவர் தனது ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யக்கூடும் என்றும் அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.



▶ திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயவிலை கடைமூலம் நிவாரணநிதி வழங்கப்பட்டு வருகிறது. சேரன்மகாதேவியில் உள்ள நியாயவிலைக்கடையில் நிவாரணத்தொகை வழங்கப்படுவதை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் கா.ப.கார்த்திகேயன், முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணத்தொகையும் 5கிலோ அரிசியும் வழங்கினார்கள்.

## "இந்தியா தன்னம்பிக்கையால் நிரம்பி வழிகிறது" மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரை



புதுடெல்லி : ஜன. 1-
இந்தியா தன்னம்பிக்கையால் நிரம்பி வழிகிறது என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, அடுத்த ஆண்டும் இதே உற்சாகத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மாதம்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் மனதின் குரல் (மன் கி பாத்) எனும் வானொலி நிகழ்ச்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்காக உரையாற்றி வருகிறார். இந்தவகையில், நேற்றைய உரை 108வது மாதத்தின் உரை. இதில் அவர் கூறியதாவது: 108 என்பது சிறப்பான ஒரு எண். இதுவரையிலான மனதின் குரல் நிகழ்ச்சிகளில் பல்வேறு எடுத்துக்காட்டுக்களைப் பார்த்திருக்கிறோம். பலரிடம்இருந்துஉத்வேகம் பெற்றுள்ளோம். இந்த நிலையை அடைந்த பிறகு புதிய ஆற்றலுடன், புதிய வேகத்துடன் புதிதாக வளர வேண்டும் என்று நாம் தீர்மானிக்க வேண்டும். இன்றைய சூரிய உதயம் 2024ன் புதிய உதயமாக இருக்கப் போகிறது.

தற்போது இந்தியா தன்னம்பிக்கையால் நிரம்பிவழிகிறது. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான எழுச்சி இது. 2024ம் ஆண்டிலும் இதே உணர்வை, வேகத்தை நாம் பராமரிக்க வேண்டும். சந்திரயான்-3ன் வெற்றிக்காக இன்றும் கூட பலர் எனக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்புகிறார்கள். நமது விஞ்ஞானிகள் குறித்து, குறிப்பாக நமது பெண் விஞ்ஞானிகள் குறித்து நான் பெருமை கொள்கிறேன். என்னைப் போலவே நீங்களும் பெருமை கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஆண்டு நமது விளையாட்டு வீரர்கள் சிறப்பானவிளையாட்டை வெளிப்படுத்தினார்கள். ஆசிய விளையாட்டுப் போட்டியில் 107 பதக்கங்களையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் 111 பதக்கங்களையும் அவர்கள் வென்றுள்ளனர். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தங்களின் செயல்பாடு மூலம் நமது வீரர்கள் நாட்டு மக்களின் மனங்களை வென்றனர். அடுத்ததாக, 2024ல் பாரிஸ் ஒலிக்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. அதற்காக, ஒட்டுமொத்த தேசமும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கிறது.

புதுமை கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியா மாறும் வரை அது தனது ஓட்டத்தை நிறுத்தாது. 2015ல் சர்வதேச புதுமை கண்டுபிடிப்புகளுக்கான பட்டியலில் இந்தியா 81வது இடத்தில் இருந்தது. இன்று நாம் 40வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறோம். ஃபிட் இந்தியா தொடர்பான கருத்துக்களை அனுப்புமாறு நான் உங்களைக் கேட்டுக்கொண்டேன். அதற்காக நீங்கள் காட்டிய உற்சாகம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. இந்தியாவின் முயற்சி காரணமாக 2023ம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டது.

உடல் ஆரோக்கியம் குறித்த ஆர்வம் நாட்டு மக்களிடையே அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, அதற்கான பயிற்சியாளர்களின் தேவை அதிகரித்துள்ளது. ஜோகோ டெக்னாலஜிஸ் போன்ற புத்தாக்க நிறுவனங்கள், ஃபிட் இந்தியாவின் கனவை நனவாக்கபங்களிக்கின்றன. காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சிக்காக தமிழ்நாட்டில் இருந்து காசிக்கு வந்தவர்களோடு நான் செயற்கை நுண்ணறிவு கருவி மூலம் உரையாடினேன். இதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நான் இந்தியில் உரையாற்றினேன். அதனை அவர்கள் தமிழில் அப்போதே கேட்டார்கள். மொழிபெயர்ப்பு சார்ந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து இளைஞர்கள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன் என்று பிரதமர் மோடி உரையாற்றினார்.

## புதுக்கோட்டையில் "வேர்களைத் தேடி" புலம்பெயர்ந்த தமிழர்களின் வாரிசுகள் வருகை – மாவட்ட ஆட்சியர் வரவேற்று கலந்துரையாடல்



**புதுக்கோட்டை, ஜன. 1-**
புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசல் சுற்றுலாதளத்திற்கு, தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை சார்பில்,'வேர்களைத்தேடி என்னும் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாரிசுகள் தமிழக பண்பாட்டினை அறிந்துகொள்ளும் வகையில் வருகை புரிந்தனர் அவர்களை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா நேற்று வரவேற்று கலந்துரையாடினார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது, உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் 'வேர்களைத் தேடி" திட்டத்தின் மூலம் அயலகத்தில் வாழும் தமிழர்களின் நலன் காக்கவும், அயலகத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து கல்வி, வேலைவாய்ப்புகள் என்று இடம்பெயரும் தமிழர்களை பாதுகாப்பாக வழிநடத்தவும், தமிழக முதல்வர் வழிகாட்டுதலுடன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை செயல்பட்டு வருகிறது.

அயலகத் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் முகமாக தமிழக அரசு அயலகத் தமிழர் தினம்" எனும் சிறப்புதினத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னையில் கொண்டாடி வருகிறது. அயலகத் தமிழர்களின் கலச்சார உறவுகளை மேம்படுத்துவதின் ஒரு பகுதியாக, பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம்பெயர்த்து அங்கு வாழும் அயலகத்தமிழர்களின் குழந்தைகளுக்காக 'வேர்களைத் தேடி" என்றொரு பண்பாட்டு பயணத் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

இத்திட்டம் மூலம் அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட தமிழர்களின் குழந்தைகள், இளைஞர்களை தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து, தமிழ் மற்றும் தமிழர்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணம் மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் 'வேர்களைத் தேடி" திட்டத்தின் முதல் பண்பாட்டு பயணத்தை டிசம்பர் 27-ஆம் தேதி மகாபலிபுரத்தில் இருந்து, தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் துவக்கி வைத்தார். இப்பண்பாட்டு பயணத்திற்காக ஆஸ்திரேலியா, கனடா, பீஜி, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 58 இளைஞர்கள் தேர்வாகி தமிழ்நாடு அரசு செலவில் வந்துள்ளனர்.

இவர்கள் சென்னையில் இருந்து மகாபலிபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, செஞ்சிகோட்டை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்கு பயணித்து தமிழர்களின் கட்டிடகலை, சிற்பக்கலை, இயல், இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம், சுதந்திரபோராட்ட வரலாறு உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்வார்கள். இந்தஇருவாரபயணத்தின் மூலம் தமிழர்களின் கலாச்சாரம், வரலாறு, மொழியியல் உட்பட பல்வேறு திறன்களை பெறுவார்கள்.

3 -வது ஆண்டாக அயலகத்தமிழர்கள் தினம் வரும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் சென்னையில் உள்ள நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் பிரமாண்டமாக நடைபெறுகிறது. இவ்விழாவில் இந்த இளைஞர்கள் பங்கேற்று தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வார்கள். மேலும் இவர்கள் தங்கள் நாடுகளுக்கு சென்று தமிழர்களின் கலாச்சார தூதுவர்களாகவும் செயல்படுவார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் சுற்றுலாதளத்தில், பழக்காலத்தில் சமண துறவிகள் மேற்கொண்ட வாழ்வியல் குறித்தும், சித்தன்னவாசலில் உள்ள மூலிகை ஓவியங்கள் குறித்தும், சுற்றுலா குழுவினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலையின் சிறப்புகள் குறித்தும், திருமயம் கோட்டையின் சிறப்புகள் குறித்தும், ஏனைய சுற்றுலா தளங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறப்புகள், கட்டிட கலையின் பெருமைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மாநில அரசின் மூலம் தமிழகத்தின் பண்பாட்டினை அறிந்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'வேர்களைத் தேடி" என்ற பயணத்தின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் அவர்களின் பண்பாடுகளை உலகரிய செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இலுப்பூர் வருவாய்கோட்டாட்சியர் தெய்வநாயகி, அன்னவாசல் ஒன்றியக் குழுத் தலைவர் வி.ராமசாமி, மாவட்ட சுற்றுலா அலுவலர் பி.முத்துச்சாமி, இலுப்பூர் வட்டாட்சியர் சூரியபிரபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தன், பிரேமாவதி, ஊராட்சிமன்றத் தலைவர் பொன்னுசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாட்டுவண்டி, குதிரைவண்டி எல்கைபந்தயம்

## சுற்றுச்சூழல் துறை அமைச்சர் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்



அறந்தாங்கி : ஜன. 1, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சி திமுக இளைஞரணி சார்பில் மாட்டுவண்டி குதிரைவண்டி எல்கைப்பந்தயம் நடைபெற்றது.

போட்டியினைதமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். நடுமாடு, சிறியமாடு என இரு பிரிவுகளாக நடைபெற்ற மாட்டுவண்டி பந்தயத்தில் 36 இரட்டை மாட்டுவண்டிகளும் நடுக்குதிரை பிரிவில் 20 குதிரைகளும் பங்கேற்றன. போட்டியில் நாகை திருச்சி திருப்பூர் பவானி புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட மாட்டுவண்டி மட்டும் குதிரைவண்டிகள் போட்டியில் கலந்துகொண்டன போட்டியில் கலந்துகொண்ட மாட்டுவண்டி மற்றும் குதிரைவண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன.

வெற்றிபெற்றமாட்டுவண்டி மற்றும் குதிரைவண்டி உரிமையாளர்களுக்கு மொத்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் மற்றும் கோப்பைகளும் வழங்கப்பட்டது. பந்தய நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றிய செயலாளர் குமார், மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன், சிட்டங்காடு ரஞ்சன், ஆசிரியர் ஞானப்பிரகாசம், திமுக விவசாய அணி அமைப்பாளர் அருள்நம்பி, மன்னகுடி சோமு, முன்னாள் கவுன்சிலர் உத்தமநாதன், கவுன்சிலர் மாரியம்மாள் கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர் கணேசன், வழக்கறிஞர் திருமுருகன் ராஜேஸ், தங்கராசு, KMCM. அருணாச்சலம் மற்றும் சுற்றுவட்டார பந்தய ரசிகர்கள் ஆயிரக்கணக்கானோர் சாலையின் இருபுறமும் நின்று கண்டு ரசித்தனர்.

# மக்கள் ஆணையம் மிஸ்டர் ஆணையர் 2023 விருது வழங்கும் விழா




மதுரை : ஜன. 1, மக்கள் ஆணையம்மிஸ்டர் ஆணையர் 2023 விருது வழங்கும் விழா மதுரை பைபாஸ் சாலையில் அமைந்துள்ள கே.பி.எஸ். மஹாலில் நடைபெற்றது.

இவ்விழாவில் மதுரை சரக சிறைத்துறை துணைத்தலைவர் டி.ஐ.ஜி D.பழனி அவர்களுக்கும், மதுரை மாநகராட்சி துணை மேயர் T.நாகராஜன் அவர்களுக்கும்,, மக்கள் ஆணையம் மாத இதழின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான என்.கே.முத்தையா பொற்கரங்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர்களுடன் தமிழ்நாடு வணிகர் சங்க பேரவையின் மாவட்ட செயலாளர் அழகேசன், பொறுப்பாசிரியர் பாண்டித்துரை, இணை ஆசிரியர் திருப்பதி அவர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இது தவிர பார்வையற்றோர்களுக்கு மக்கள் ஆணையம் சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.






மதுரை காலேஜ் ஹவுஸில் நடைபெற்ற "சட்டமன்றத்தில் பி.கே.மூக்கையாத்தேவர்" நூல் வெளியீட்டு விழாவில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தேசிய துணைத் தலைவர், பொதுச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.வி.கதிரவன் வெளியிட்டார். நேதாஜி சுபாஷ் சேனையின் நிறுவனத்தலைவர் வி.மகாராஜன் அவர்களின் சார்பாக மாநில செயலாளர் எம்.சுமன்தேவர் மற்றும் இளைஞரணி தலைவர் நிர்மல்குமார், மாநில வர்த்தக அணி செயலாளர் செந்தூர் மகேஷ், இளைஞரணி செயலாளர் பாலா, இளைஞரணி சுபாஷ், துணை செயலாளர் சேதுபதி மற்றும் தேவரின் பற்றாளர்களும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் முப்பதும் தப்பாமே ஐந்தாம் ஆண்டு திருப்பாவை முற்றோதல் மாநாடு சீர்வரிசை மற்றும் முற்றோதல் நகர்வலம்



ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன. 1-

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி நான்கு ரத வீதிகளில் பூஜைக்குரிய ஜீயர் சுவாமிகள் மற்றும் ஆச்சாரி புருஷர்கள் தலைமையில் வலம் வந்து திருப்பாவை பாடி, தாயர் ஆண்டாளின் பெருமைகளை உலகறியச் செய்து ஒன்றுகூடி, கூடியிருந்து குளிர்வோம் என நான்கு ரத வீதிகளிலும் தயார் புகழ் பாடுவோம், ஆண்டாள் தாயாரின் அருளோடு சீர் தட்டு ஏந்தி வீதி ஊர்வலமாக சென்றனர். என்.எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையேற்று நடத்தினார், ஸ்ரீமதிஅனிதா வரவேற்புரை ஆற்றினார், ரெங்கராஜன் ஸ்தானீகம் ஆண்டாள் திருக்கோவில் முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து பாரதிய ஜனதா கட்சி விருதுநகர் மேற்கு மாவட்ட தலைவர் சரவணதுரை என்ற ராஜா சிறப்புரையாற்றினார்.

திருப்பாவை முற்றோதல் நிகழ்ச்சியின் அமைப்பாளர் ராமசுப்பு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் விஸ்வஹிந்து பரிஷத், திருக்கோயில் திருமடங்கள் தென்பாரத அமைப்பாளர் சரவணகார்த்திக், பாலமுருகன் பஜ்ரங் தள் அமைப்பாளர், கிருஷ்ணமூர்த்தி விஎச்பி மாவட்ட பொறுப்பாளர், அருண் வெங்கடேஷ் விஎச்பி திருக்கோயில் மாவட்ட அமைப்பாளர் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தனர். பாரதிய ஜனதா கட்சி ஸ்டார்ட் பிரிவு மாநில தலைவர் தென்காசி பாராளுமன்ற அமைப்பாளர் ஆனந்தன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக தேசிய தூய்மை பணியாளர் ஆணையத்தின் தலைவர் வெங்கடேசன், நாகராஜன் விஎச்பி தேசிய இணை செயலாளர், ஸ்ரீ ராம நம்பி நாராயணன் ஒரே நாடு ஆசிரியர், மூத்த பத்திரிகையாளர் ரெங்கராஜ் பாண்டே கலந்து கொண்டனர். சண்முக ஆனந்த் நிகழ்ச்சி இணை ஒருங்கினைப்பாளர் நன்றியுரை வழங்கினார்.

# தென்காசி வடக்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்




சங்கரன்கோவில் : ஜன. 1, தென்காசி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் மற்றும் சிறப்பாக பணியாற்றவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரிய துரை முன்னிலை வகித்தார். வடக்குமாவட்ட தகவல்தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கிப்ட்சன் வரவேற்றார். இதில் தகவல் தொழில்நுட்ப அணி மண்டல ஒருங்கிணைப்பாளர் மதுரை பாலா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். நீட் தேர்வு எதிர்ப்புகையெழுத்து இயக்கம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நினைவு பரிசுகளை வழங்கினார். மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் சிவசங்கரநாரயணன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் ரஜினிகாந்த் மாரியப்பன், மகேஷ்பாண்டி மற்றும் மாவட்ட ஒன்றிய, நகரம், பேரூர் கழக தகவல் தொழில்நுட்ப அணியினர் பங்கேற்றனர்.

# தமுஎகச சார்பில் தோழர் என்.சங்கரய்யா மற்றும் நடிகர் விஜயகாந்துக்கு புகழஞ்சலி கூட்டம்

புதுக்கோட்டை : ஜன. 1-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி கிளை சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் என் சங்கரய்யா, தேமுதிக தலைவர் நடிகர் விஜயகாந்த், ஆலங்குடி கவிஞர் ஆரா ஆகியோருக்கு புகழஞ்சலி கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஆலங்குடியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தமுஎகச ஆலங்குடி கிளைத் தலைவர் ஆர்டிஸ்ட் எஸ்.முருகேசன் தலைமை வகித்தார். சுதந்திர போராட்ட வீரர், தகை சால் தமிழர் என்.சங்கரயா குறித்து மாவட்ட துணைத் தலைவர் சு.மதியழகன், தேமுதிக தலைவர் நடிகர் விஜயகாந்த் குறித்து மாவட்ட செயற்குழு உறுப்பினர் வெள்ளைச்சாமி, கவிஞர் ஆரா குறித்து மாவட்டக்குழு உறுப்பினர் மு.ராசா ஆகியோர் பேசினர். தமுஎகச முன்னாள் மாவட்டச் செயலாளர் ராமா.ராமநாதன் கருத்துரை வழங்கினார். ராமு, கோவிந்தராஜ் கவிதை வாசித்தனர். சரவணன் பாடல் பாடினார். முன்னதாக கிளைச் செயலாளர் நேசன்மகதி வரவேற்க, மாவட்ட குழு உறுப்பினர் வம்பன் செபா நன்றி கூறினார்.

# தென்காசி ஷீரடி வைத்தியசாயி கோயிலில் ஆங்கில புத்தாண்டு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது



தென்காசி:ஜன,1,தென்காசி களக்கோடி தெரு, மங்கம்மா சாலையில் அமைந்துள்ள ஷீரடி வைத்தியசாயி திருக்கோவிலில் ஆங்கில புத்தாண்டு நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகிறது.

காலை 6.15 மணிக்கு ஆரத்தியும், காலை 7.00 மணி முதல் 12.30 மணி மற்றும் 2.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (ஆரத்தி நேரம் தவிர) புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி, பக்தர்கள் தாங்கள் கொண்டுவரும் பூக்களால் பாபாவிற்கு தாங்களே புஷ்பாஞ்சலிசெய்துகொள்ளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணி முதல் 12.30 மற்றும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் உற்சவர் பாபாவிற்கு அர்ச்சனையும் மதியம் 12 30 மணி அளவில் அஷ்டோத்திரம் சிறப்பு ஆரத்தியும், மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை ஸ்ரீலட்சுமி குபேர பூஜையும் நடைபெறுகிறது. மாலை 6.30 மணிக்கு மாலை சிறப்பு ஆரத்தியும், இரவு 7.00 மணிக்கு பல்லக்கு ஊர்வலமும், இரவு 8.30 மணிக்கு இரவு ஆரத்தியும், நடைபெறுகிறது. இந்த புத்தாண்டு நிகழ்ச்சிகளில் அனைவரும் கலந்து கொண்டு பாபாவின் அருள் பெறகோவில் அறங்காவலர்கள் டாக்டர்கள் அறிவழகன், மற்றும் சியாமளா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# நூல் வெளியீட்டு விழாவிற்கு அனுமதி அளிக்க அரசியல், இலக்கிய அமைப்புகள் கோரிக்கை




புதுக்கோட்டை , ஜன. 1-

புதுக்கோட்டை எழுத்தாளர் மருத்துவர் நா.ஜெயராமன் எழுதிய நூலை வெளியிடுவதற்கு காவல்துறை அனுமதிக்க வேண்டுமென புதுக்கோட்டையில் உள்ள பல்வேறு அரசியல் மற்றும் இலக்கிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

புதுக்கோட்டையில்அபெகா பண்பாட்டு இயக்கத்தை நடத்தி வருபவர் மருத்துவர் நா.ஜெயராமன். இவர் கடந்த காலங்களில் பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக தான் எழுதிய 'சாதி-கக்கூஸ்-கோவில்' என்ற நூலை கடந்த டிச. 30 அன்று வெளியிட திட்டமிட்டு இருந்தார். இந்நிலையில் சில இந்துத்துவ வாதிகளின் எதிர்ப்பை அடுத்து காவல்துறை நூல் வெளியீட்டு விழாவிற்கு அனுமதி மறுத்தது.

இந்நிலையில், புதுக்கோட்டையில் உள்ள பல்வேறு 32 அரசியல் மற்றும் இலக்கிய அமைப்புகள் ஒன்று கூடி கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் மருத்துவர் நா.ஜெயராமனின் நூல் வெளியீட்டு விழாவிற்கு அனுமதி அளிக்க வேண்டும் என புதுக்கோட்டை கணேஷ் நகர் காவல் நிலையத்தில் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

திமுக மாநில இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ். கவிவர்மன், காங்கிரஸ் நகரத் தலைவர் இப்ராஹிம் பாபு, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திலீபன், அரங்க குணசேகரன், விடுதலைக்குமரன், தமுஎகச மாவட்ட நிர்வாகிகள் ராசி. பன்னீர்செல்வன், எம். ஸ்டாலின் சரவணன், கி.ஜெயபாலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தீயணைப்புத் துறை இணை இயக்குநர் பிரியா ரவிச்சந்திரன் ஐஏஎஸ் அதிகாரியாக நியமனம்



சென்னை, ஜன. 1-

தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் இணை இயக்குநர் என்.பிரியா ரவிச்சந்திரன், தமிழகப் பிரிவு ஐ.ஏ.எஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. மாநில அரசுப் பணியில் இருந்து 2022-ம் ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ் பிரிவு அதிகாரியாக பிரியா தோவாகியுள்ளார்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் இணை இயக்குநராக பணியாற்றும் பெண் அதிகாரி பிரியா ரவிச்சந்திரன், மாநில அரசு அல்லாத சிவில் சர்வீசஸ் ஒதுக்கீட்டிலிருந்து ஐ ஏ எ ஸ் ஆ க நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2003-ம் ஆண்டு தமிழக அரசின் குரூப் 1 அதிகாரியாக பணியில் சேர்ந்த பிரியா ரவிச்சந்திரன், தீயணைப்புத் துறையில் பணியாற்றி, இணை இயக்குநர் நிலைக்கு அவர் உயர்ந்தார்.

மாநில அரசின் பரிந்துரைப்படி ஆண்டுதோறும் காலியாக உள்ள குறிப்பிட்ட சில இடங்களுக்கு குரூப் 1 அதிகாரிகள் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக நியமனம் செய்யப்படுவர். இந்த நடைமுறையின்படி, 2022-ம் ஆண்டு காலியாகவுள்ள இடத்துக்கு தீயணைப்புத் துறை இணை இயக்குநர் பிரியா ரவிச்சந்திரன் தோவாகியுள்ளார். தீயணைப்புத் துறையில் இருந்து ஒருவா் ஐ.ஏ.எஸ் அதிகாரியாக தோவாகியிருப்பது தமிழகத்தில் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2023-ஆம் ஆண்டிற்கான பசுமை சாம்பியன் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

## அரியலூர் மாவட்ட ஆட்சியர் தகவல்



அரியலூர் : ஜன. 1, 2023 ஆம் ஆண்டுக்கான பசுமை சாம்பியன் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சியர் ஆனி மேரி ஸ்வர்ணா கூறியுள்ளார்.

இது பற்றி அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வெளியிட்ட செய்தி குறிப்பு : தமிழக அரசின், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களுக்கு அதாவது தனிநபர்கள் / அமைப்புகளுக்கு பசுமை சாம்பியன் விருது 100 நபர்களுக்கு வழங்கி, தலா ரூ.1,00,000/- வீதம் பண முடிப்பும் வழங்க உள்ளது. கீழ்கண்ட தலைப்புகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வை சிறப்பாக அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்திய நிறுவனங்கள் (அமைப்புகள்), கல்வி நிறுவனங்கள், குடியிருப்போர் நல சங்கங்கள், தனிநபர்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற்சாலைகளுக்கு பசுமை சாம்பியன் விருது வழங்கப்படும்.

1.சுற்றுச்சூழல் கல்வி மற்றும் பயிற்சி, 2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, 3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, 4. பசுமை தயாரிப்புகள் / பசுமை தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான ஆய்வுகள், 5. நிலைத்த வளர்ச்சி, 6. திடக்கழிவு மேலாண்மை, 7. நீர் மேலாண்மை மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பு, 8. காலநிலை மாற்றத்திற்கு உட்படுதல் மற்றும் தணிப்பு நடவடிக்கை, 9. காற்று மாசு குறைத்தல், 10. பிளாஸ்டிக் கழிவுகளின் மறுசுழற்சி மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கை, 11. சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு, 12. கடற்கரை பாதுகாப்பு நடவடிக்கை, 13. பிற சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்கள் ஆகிய தலைப்புகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அமைக்கப்பட்ட பசுமை சாம்பியன் விருது தேர்வு செய்யும் குழு மூலம் தகுதி வாய்ந்த 100 தனி நபர்கள் / நிறுவனங்களை ஒவ்வொரு வருடமும் தேர்வு செய்யும். இதற்கான விண்ணப்ப படிவம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இன்னும் கூடுதல் தகவல்கள் தேவைப்படுவோர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அவர்களை அணுகலாம் எனவும், மேலும், பசுமை சாம்பியன் விருது பெற விண்ணப்பிக்க 2024-ம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி கடைசி நாள் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்.




காரைக்கால் வளர்ச்சிக் குழு ஏழாம் ஆண்டு விழா சண்முகா மேல்நிலைப் பள்ளியில் வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வழக்கறிஞர் திருமால்வளவன், இன்ஜினியர் பாலமுருகன், ராஜேந்திரன், அறிவழகன், அன்சாரி பாபு, பாஸ்கரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் காரைக்காலைச் சேர்ந்த கவிஞர் கனகவள்ளிக்கு தமிழ் சேவைகப் பணிகளை பாராட்டி செந்தமிழ் சேவை செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# இன்று விண்ணில் பாய்கிறது பி.எஸ்.எல்.வி.சி–58 ராக்கெட் பழவேற்காடு மீனவர்கள் மீன் பிடிக்கத் தடை

சென்னை : ஜன. 1–

பிஎஸ்எல்விசி-58 ராக்கெட் இன்று காலை விண்ணில் ஏவப்பட உள்ளது. இந்த நிலையில் பாதுகாப்பு காரணங்கள் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பழவேற்காடு மீனவர்கள் நேற்று மாலை முதல் இன்று வரை கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து இன்று காலை 9.10 மணி அளவில் பி.எஸ்.எல்.வி.சி-58ராக்கெட்



விண்ணில் ஏவப்படுகிறது. இந்த ராக்கெட்டில் எக்ஸ்போசாட் என்ற செயற்கைகோள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த செயற்கைகோள் விண்வெளியில் உள்ள தூசுகள் மற்றும் கருந்துளை மேககூட்டங்களை ஆய்வு செய்ய இருக்கிறது இந்த செயற்கைகோளுடன், வெளிநாட்டு செயற்கைகோள்கள் சிலவற்றையும் இஸ்ரோ விண்ணில் செலுத்துகிறது. இதற்கான இறுதி கட்டப் பணியான 25 மணி நேர கவுண்டவுன் நேற்று காலை 8.10 மணிக்கு தொடங்கியது.

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மீனவர்கள் நேற்று மாலைமுதல்இன்று வரை முன்னெச்சரிக்கை காரணமாக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை சார்பில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# கிளாம்பாக்கத்திலிருந்து தென்மாவட்டங்களுக்கு இன்று முதல் பேருந்துகள் இயக்கம் – அமைச்சர் சிவசங்கர் அறிவிப்பு

சென்னை : ஜன. 1, தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் அரசு விரைவுபேருந்துகள் இன்று முதல் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் என தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.





கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சிவசங்கர், "தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் அரசு விரைவு பேருந்துகள் (SETC) இன்று அதிகாலை 4 மணி முதல் கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படும். தென் மாவட்டங்களில் இருந்து சென்னை வரும் பேருந்துகள் கோயம்பேடு வரை இயக்கப்படாது. இனி கிளாம்பாக்கம் வரை மட்டுமே இயக்கப்படும். கிளாம்பாக்கத்தில் இருந்து மாநகர பேருந்துகள் இன்று முதல் அனைத்து பகுதிகளுக்கும் இயக்கப்படும்.

விரைவு பேருந்து செயல்பாடுகள் உடனடியாக நடைமுறைக்குவரும். அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அல்லாத மற்ற ஆறு போக்குவரத்து கழகங்கள் - விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு அரசு போக்குவரத்து கழகங்களுடைய பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து கிளாம்பாக்கம் வந்து அந்தந்த வழித் தடத்தில் இயங்கும். பொங்கல் வரை இந்த நிலை நீடிக்கும்.

பொங்கலுக்கு பிறகு அனைத்து பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்து தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு இயக்கப்படும். 1,140 புறப்பாடுகள் பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து கிளாம்பாக்கம் வழியாக இயக்கப்படும். அதேபோல் ஆம்னி பேருந்துகளும், பொங்கல் பண்டிகைக்கு பிறகு இங்கிருந்து இயக்கப்படும்.

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படும் பேருந்துகள் நேற்று காலையிலிருந்து சென்னையின் அனைத்து பகுதிகளுக்கும் கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும். மாநகர போக்குவரத்துக் கழகத்தை பொறுத்தவரை கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கு கிளாம்பாக்கத்திலிருந்து 270 நடைகள் இயக்கப்படும். ஐந்து நிமிடத்துக்கு ஒரு பேருந்து இங்கிருந்து கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கு செல்லும்.

மேலும், அதேபோல தாம்பரத்துக்கு 2 நிமிடத்துக்கு ஒரு பேருந்து கிளாம்பாக்கத்திலிருந்து புறப்படும். கிண்டிக்கு செல்லும் மாநகர போக்குவரத்துபேருந்துகள் மூன்று நிமிடத்துக்கு ஒரு பேருந்து என்ற அளவில் இயக்கப்படும். ஏற்கெனவே இந்த வழித் தடத்தில் 2,386 நடை பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்போது கூடுதலாக 1,691 நடை பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. எனவே, மொத்தம் 4,077 நடைகள் கிளாம்பாக்கத்தின் இந்த வழித்தடத்தில் இயக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி அச்சு மற்றும் தொலைக்காட்சி பத்திரிகையாளர் சங்கத்தின் காரைக்கால் கிளையின் சார்பாக காரைக்காலில் அமைந்துள்ள சீகல்ஸ் வளாகத்தில் பத்திரிக்கையாளர் தின விழா நேற்று நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் பாரீஸ்ரவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் காரைக்கால் தெற்கு,தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், திருநள்ளாறு சட்டமன்ற உறுப்பினர் சிவா, திருப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மனீஸ், துணை ஆட்சியர் ஜான்சன், மற்றும் அரசு அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் துணைத் தலைவர் பாரு சங்கத்தின் பொருளாளர் இளையராஜா மற்றும் பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறையைச் சேர்ந்த அனைவரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நண்பர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

# ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் குற்றம்சாட்டப்பட்ட போலீஸ் அதிகாரிக்கு பதவி உயர்வா?

## ரத்து செய்ய மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை : ஜன. 1, ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பதவி உயர்வு வழங்கியதை மறுபரிசீலனை செய்து ரத்துசெய்ய வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது : ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டை விசாரித்த ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கை கடந்த அக்டோபர் மாதம் வெளியானது. இந்த அறிக்கை பல்வேறு குற்றங்களை வெளிக் கொண்டுவந்தது. அன்றைய மாவட்ட ஆட்சியர் வெங்கடேஷ், தென்மண்டல ஐஜி சைலேஷ் குமார் யாதவ், மாவட்ட காவல் கண்காணிப்பாளராக



இருந்த கபில் குமார் சரத்கர், துணை வட்டாட்சியராக இருந்த சேகர் உள்ளிட்ட காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இந்நிலையில் அன்றைய தென் மண்டல ஐஜியாக இருந்த சைலேஷ் குமார் யாதவுக்கு இப்போது டிஜிபியாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு பதவி உயர்வு வழங்கப்படுவது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. எனவே, ஸ்டெர்லைட் துப்பாக்கி சூட்டுக்கு காரணமானவர்கள் மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தற்போது சைலேஷ் குமார் யாதவுக்கு வழங்கப்பட்டுள்ள டிஜிபி பதவி உயர்வை மறுபரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டும்.

இவ்வழக்கில் குற்றவாளிகள் அனைவர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தயங்குவது உயர் அதிகாரத்தில் உள்ளவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதற்கு தூண்டுகோளாக அமைந்து விடும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

### தொடர் விடுமுறை எதிரொலி

# வேளாங்கண்ணியில் குவியும் சுற்றுலா பயணிகள்

நாகை : ஜன. 1–

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னை பேராலயம் உள்ளது. கீழை நாடுகளின் லூர்து நகர் என்ற பெருமை கொண்டது. பேராலயத்தில் ஆண்டுதோறும் ஆங்கில புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்படும்.

இந்த விழாவுக்கு ஏராளமான வெளிமாநில சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் வருகை தருவர். 2024 ஆங்கில புத்தாண்டு பிறக்கிறது. இதையொட்டி வேளாங்கண்ணி பேராலயத்துக்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்கள் மற்றும் பல மாவட்டங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வந்து குவிந்துள்ளனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் 3 நாட்கள் தொடர் விடுமுறை என்பதால் உள்ளூர் பக்தர்களும் வந்துள்ளனர்.

இதனால் வேளாங்கண்ணியில் சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. வேளாங்கண்ணி பேராலயம், மாதாகுளம், நடுத்திட்டு, பழைய வேளாங்கண்ணி, கடற்கரை சாலை, வேளாங்கண்ணி கடற்கரை என எங்கு பார்த்தாலும் சுற்றுலா பயணிகளாக காணப்படுகின்றனர். இவர்கள் வேளாங்கண்ணி கடற்கரையில் கடலில் இறங்கி குளிப்பதுடன் புகைப்படம் எடுத்தும் மகிழ்கின்றனர். வேளாங்கண்ணி பேராலயத்தில் நேற்று நள்ளிரவு முதல் இன்று காலை வரை ஆங்கில புத்தாண்டு சிறப்பு திருப்பலி நடைபெறும். இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பர் என்பதால் 250க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஒருநாள் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை கிடுகிடு உயர்வு

## 8 மாதங்களுக்குப் பின் உச்சம் – அச்சத்தில் மக்கள்

புதுடெல்லி : ஜன. 1–

இந்தியாவில் 8 மாதங்களுக்குப் பின்னர் ஒரே நாளில் 841 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோல் ஒரே நாளில் கொரோனாவுக்கு நாட்டில் 7 பேர் பலியாகியுள்ளனர். மீண்டும் கொரோனா பாதிப்பு வேகமெடுத்துள்ளதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சீனாவின் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் 2020 முதல் உலக நாடுகளை ஆட்டிப்படைத்தது. பொதுமுடக்கம், பொருளாதார முடக்கம், உயிர் பலிகள் என உலக நாடுகளையே இரண்டு ஆண்டுகள் ஸ்தம்பிக்க வைத்தது கோவிட் வைரஸ். இந்த நிலையில் கடந்த ஒரு ஆண்டாக கொரோனா பரவல் பெரிதாக இல்லாததால் மக்கள் பெருமூச்சு விட்டனர்.

மக்களின் நிம்மதிக்கு வேட்டு வைக்கும் விதமாக கடந்த சில வாரங்களாகவே உலகின் பல்வேறு நாடுகளில் ஜே.என்.1 என்ற புதிய உருமாறிய கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டு வருகிறது. அதேபோல இந்தியாவிலும் ஜே.என்.1 வகை வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது. குறிப்பாக கேரள மாநிலத்தில் கொரோனா அதிகம் பரவியது. பின்னர் நாடு முழுவதுமே கொரோனா பரவல் சற்று அதிகமாகி வருகிறது. கடந்த சில வாரங்களாகவே ஒருநாள் பாதிப்பு எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து



வருகிறது.

இந்தியாவில் கடந்த 8 மாதங்களில் இல்லாத அளவாக, அதாவது 227 நாட்களுக்கு பின்னர் இந்தியாவில் ஒரே நாளில் 841 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதேபோல் நாட்டில் ஒரே நாளில் கொரோனாவுக்கு 7 பேர் பலியாகியுள்ளனர். அதிகபட்சமாக கேரளாவில் 3 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர். குறிப்பாக கேரளாவில் அதிகபட்சமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒரே நாளில் 381 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. கர்நாடகாவில் ஒரே நாளில் 182 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 4309 ஆக உள்ளது. 8 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் கொரோனா பாதிப்பு உச்சத்தை தொட்டுள்ளதால் பொதுமக்கள் கடும் அச்சத்தில் உறைந்துள்ளனர். இதன் காரணமாக பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களில் இனிவரும் வாரங்களில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

### மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ

# இந்த புத்தாண்டு வழிவகுக்கும் பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் புத்தாண்டு வாழ்த்து

சென்னை, ஜன,1

நமது கனவுகள் அனைத்தும் நிறைவேற இந்த புத்தாண்டு வழிவகுக்கும் கடந்த ஆண்டில் வழக்கறிஞர்கள் கண்ட வெற்றிகள் இந்த ஆண்டிலும் தொடர வேண்டும்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில்



வழக்கறிஞர்கள் சங்க சாதனைகளுக்கு துணை நின்ற சங்கத்தின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இவ்வாறு அமல்ராஜ் வெளியிடுள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்

# அரியலூர் மாவட்ட ஊராட்சி குழு கூட்டம்

அரியலூர் : ஜன. 1, அரியலூர் மாவட்ட ஊராட்சி மன்ற குழு கூட்டம், அதன் தலைவர் பொ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி மன்ற செயலாளர் சிவக்குமார் முன்னிலை வகித்தார்.



அண்மையில் காலமான, தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அன்பழகன் கொண்டுவந்த தீர்மானம் அடிப்படையில், சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தினார்கள். அலுவலர் ராமராஜன் தீர்மானங்களை படித்தார். 16 தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சி குழு அலுவலர்கள் ரமேஷ், அலுவலக உதவியாளர் கண்ணன், மற்றும் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# "புல்வாமா மற்றும் ராமர் கோயிலை அரசியல் ஆதாயத்துக்காக பாஜக பயன்படுத்துகிறது"

## காங். அமைச்சர் குற்றச்சாட்டு

சித்ரதுர்கா (கர்நாடகா) : ஜன. 1, புல்வாமா தாக்குதலை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்திய பாஜக, அயோத்தி ராமர் கோயில் திறப்பிலும் அதே யுக்தியை கையாளுகிறது என்று கர்நாடக அமைச்சர் தசரதைய்யா சுதாகர் குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடக காங்கிரஸ் அரசின் திட்டமிடல் மற்றும் புள்ளியியல்துறை அமைச்சர் தசரதைய்யா சுதாகர், சித்ரதுர்காவில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், "கடந்த 2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது புல்வாமா தீவிரவாத தாக்குதலை வாக்குக்காக பாஜக அரசு பயன்படுத்தியது. இந்த முறை அந்த இடத்தில் ராமரின் படத்தை வைத்திருக்கிறது. அயோத்தி ராமர் கோயில் திறப்பு என்பது ஒரு ஸ்டண்ட். மக்கள் முட்டாள்கள் இல்லை. நாம் இரண்டு முறை முட்டாள்களாகி



விட்டோம். மூன்றாவது முறையும் முட்டாள்களாக மாட்டோம் என்று நான் நம்புகிறேன்.

ராமர் கோயில் திறப்பிக்கு பின்னால் மக்களவைத் தேர்தல் உள்ளது என்பது உண்மைதான். நானும் ரகுமூர்த்தி எம்எல்ஏவும் ராமர் கோயிலுக்கு பணம் கொடுத்துள்ளோம். கடந்த காலத்தில் கோயில்களுக்கு செங்கல் அனுப்பியிருக்கிறோம். இந்தியாவின் மத நம்பிக்கையை பாஜக வாக்குகள் பெற பயன்படுத்துகிறது. கடந்த தேர்தலில் இந்த ராமர் கோயில் எங்கே இருந்தது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னதாக கடந்த 2019, பிப்ரவரி 14-ம் தேதி, ஜம்முவில் இருந்து ஸ்ரீநகர் நோக்கி 78 பேருந்துகளில் சிஆர்பிஎப் படை வீரர்கள் சென்றனர். புல்வாமா மாவட்டம் அவந்திபோராவில், ஜம்மு காஷ்மீர் நெடுஞ்சாலையில் துணை ராணுவப் படையினரின் வாகனங்கள் வரிசையாக சென்றுகொண்டிருந்தன. அப்போது, ஒரு சிறிய கார் வேகமாக வந்து துணை ராணுவப்படையினர் சென்ற ஒரு பேருந்து மீது பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் மிகப்பெரிய சத்தத்துடன் அந்த கார் வெடிக்கப் பேருந்தில் இருந்த 40 துணை ராணுவப்படையினரும் உடல் சிதறி பலியானார்கள். தேசத்தையே இந்த தாக்குதல் உலுக்கியது. எந்த குற்றமும் செய்யாத சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டது மக்களின் மனதில் கொதிப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# கனகசபை விவகாரம் : தீட்சிதர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் – அமைச்சர் சேகர்பாபு

சென்னை : ஜன. 1, சிதம்பரம் கோயிலில் கனகசபை மீதேறி தரிசனம் செய்ய அனுமதி மறுத்த விவகாரத்தில், கோயில் தீட்சிதர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர உள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.



சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி கோயிலில், நேற்று கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்தினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தொடங்கிவைத்தார். திருவல்லிக்கேணி, திருவண்ணாமலை, அழகர்கோயில், திருப்பரங்குன்றம் மற்றும் ராமேஸ்வரம் ஆகிய 5 கோயில்களுக்கு இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது: "சிதம்பரம் கோயிலில் கனகசபை மீதேறி தரிசனம் செய்வதற்கு, கோயில் தீட்சிதர்கள் நீதிமன்றத்தில் தடையாணை கேட்டு வழக்கு தொடர்ந்தனர். ஆனால், நீதிமன்றத்தில் அதுதொடர்பாக எந்தவிதமான தடையாணையும் தரவில்லை. ஆனால், சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் தொடர்ந்து தங்களது விருப்பத்துக்கு ஏற்ப, 4 நாட்கள் ஆருத்ரா தரிசனத்தை காரணம் காட்டி, தீட்சிதர்கள் தவிர வேறு யாரும் கனகசபை மீது ஏறி தரிசனம் செய்ய தடை விதித்திருந்தனர்.

மோதல் போக்கு வேண்டாம் என்ற காரணத்துக்காக இந்து சமய அறநிலையத்துறை சார்பில், முறையாக காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறோம். நீதிமன்ற உத்தரவை மீறியதால், தீட்சிதர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர இருக்கிறோம். இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறபோது, நடந்த சம்பவங்களை நீதிபதியிடம் தெரியப்படுத்த இந்துசமய அறநிலையத்துறை முடிவெடுத்திருக்கிறது." என்று அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

முன்னதாக, சைவத்திருகோயில்களில் சிறந்து விளங்கும் சிதம்பரம் நடராஜர் கோயிலில் மார்கழி ஆருத்ரா தரிசன திருவிழா கடந்த 18-ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்றது. தினந்தோறும் காலை, இரவு பஞ்சமூர்த்கள் வீதியுலா நடைபெற்றது. டிச.26 தேரோட்ட விழா நடைபெற்றது. மூலவரான சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்தி உற்சவரராக தேருக்கு செல்வார். டிச.27 முக்கிய திருவிழாவான ஆருத்ரா தரிசன விழா நடைபெற்றது.

இந்நிலையில், டிச.25 முதல் 28-ம் வரை கனகசபையில் ஏறி பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு தடை விதித்து தீட்சிதர்கள் கனகசபையின் கதவுகளை மூடினர். இந்த நிலையில் கடலூர் மாவட்ட இந்துசமய அறநிலையத்துறைதுணை ஆணையர் சந்திரன் தலைமையில் சிதம்பரம் திருக்கோயில்களின் வட்டார ஆய்வாளர் நரசிங்க பெருமாள், தில்லை காளியம்மன் கோவில்செயல்அலுவலர் சரண்யா ஆகியோர் போலீஸ்பாதுகாப்புடன் கோவிலின் பொது தீட்சிதர்களிடம் அரசாணையின்படி கனகசபையில் பக்தர்கள் ஏறி சாமி தரிசனம் செய்ய அனுமதிக்க வலியுறுத்தினர். ஆனால், அதற்கு மறுப்பு தெரிவித்த தீட்சிதர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற தடை ஆணை பெறப்பட்டுள்ளதாகவும், இந்த நான்கு நாட்கள் மட்டும் பக்தர்களை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்திருந்தனர். இதையடுத்து, இந்து அறநிலையத் துறை அதிகாரிகளை பணி செய்யவிடவில்லை என்று கூறி தீட்சிதர்கள் மீது போலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் இலவச தற்காப்பு கலை பயிற்சி முகாம் நிறைவு

# பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி




புதுக்கோட்டை : ஜன. 1-

புதுக்கோட்டை ஸம்ஸ்க்ருத வித்யாலயா ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளியில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இலவச தற்காப்பு கலை பயிற்சி முகாம் நிறைவு விழா, நேரு யுவ கேந்திரா, மாவட்ட குழந்தைகள் நலக் குழுமம், சிட்டி ரோட்டரி சங்கம், செஞ்சுரி லயன்ஸ் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட குத்துச்சண்டை கழக தலைவர் எஸ்விஎஸ்.ஜெயக்குமார் தலைமை தாங்கினார். புத்தாஸ் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளையின் தலைவர் சேது கார்த்திகேயன் விழா நோக்க உரையாற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக ராஜ்குமார் விஜயகுமார் தொண்டைமான், கார்த்திக் தொண்டைமான், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு தற்காப்பு கலை பயிற்சிபெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி வாழ்த்து கூறினார்கள்.

நிகழ்வில் நாட்டு நல பணித்திட்ட மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் நைனா முகமது, நகர்மன்ற உறுப்பினர்கள் சுப. சரவணன், நகர்மன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு, ஆலோசகர் அனுராதா ஸ்ரீனிவாசன், நேரு யுவ கேந்திரா உதவி திட்ட அலுவலர் நமச்சிவாயம், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் சதாசிவம், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க தலைவர் மாருதி கண மோகன்ராஜ், சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் அசோகன், தக்ஷிணாஸ் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் பாலசுப்ரமணியன், புதுக்கோட்டை செஞ்சுரி லைன் சங்கத் தலைவர் மூர்த்தி, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க செயலாளர் இப்ராஹிம் பாபு, டெல்லி பப்ளிக் பள்ளியின் செயலாளர் பார்கவி கிருஷ்ணன், திருவோணம் அரசு மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி இயக்குனர் கந்தசாமி, காவிரி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி இயக்குனர் காசி ராஜேந்திரன், சமூக ஆர்வலர் சபாரத்தினம், புத்தாஸ் வீர கலைகள் கழக பொருளாளர், ஜான்சிராணி, ஆத்மா யோகா பாண்டியன், மரம் மரம் ராஜா பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் விழாவில் கலந்து கொண்டனர், முன்னதாக ஸம்ஸ்க்ருத வித்தியாலய ஓரியண்டல் பள்ளியின் தலைமை ஆசிரியர் சேகர் வரவேற்புரையாற்ற, பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம் நன்றி கூறினார்.



▶ தருமபுரி கலெக்டர் அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த ஆலோசனைக்கூட்டம் கலெக்டர் சாந்தி தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொ) ராஜகுரு உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# விருதுகளை திருப்பி அளித்த வினேஷ் போகத்

## பிரதமரை கடுமையாக விமர்சித்த ராகுல் காந்தி

புதுடெல்லி , ஜன. 1-

இரண்டு முறை சர்வதேச பதக்கங்களை வென்றுள்ள மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தனது கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளை திருப்பிக் கொடுத்தது தொடர்பாக பிரதமர் மோடியை காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் சனிக்கிழமை தனது கேல் ரத்னா மற்றும் அர்ஜுனா விருதுகளை திருப்பித் தர பிரதமர் அலுவலகத்துக்கு சென்ற போது டெல்லி போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில், விருதுகளை கடமைப் பாதையின் நடுவில் வைத்து விட்டுச் சென்றார். முன்னதாக செவ்வாய்க்கிழமை பிரதமர் மோடிக்கு போகத் எழுதிய கடிதத்தில், பெண் மல்யுத்த வீராங்கனைகளுக்கு நீதி கிடைக்காததை வெளிப்படுத்தும் விதமாக தனது கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளை அரசுக்கு திருப்பி தரப்போவதாக தெரிவித்திருந்தார். இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷண் மீது, மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டு தெரிவித்து பல மாதங்களாக போராட்டம் நடத்தி வந்தனர். தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் விதமாக வினேஷ் போகத் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி பிரதமர் மோடியை விமர்சித்துள்ளார். தனது எக்ஸ் தள பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "நாட்டின் ஒவ்வொரு மகளுக்கும் சுயமரியாதை முதன்மையானது. விருதுகள் மற்றும் மரியாதைகள் எல்லாம் அதற்கு பின்னர்தான். இன்று பாகுபலியாக சொல்லப்பட்ட ஒருவரிடம் பெற்ற அரசியல் ஆதாயம், இந்த தைரியமான மகளின் கண்ணீரை விட பெரியதா? பிரதமர்



இந்த தேசத்தின் காவலர். அவர் இதுபோன்ற கொடுமைகளில் அமைதி காப்பது வேதனை அளிக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷண் சிங் மீது வீராங்கனைகள் பாலியல் துன்புறுத்தல் புகார் தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி போராட்டம் நடத்தி வந்தனர். இந்தநிலையில் இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தேர்தல் சில தினங்களுக்கு முன் நடந்தது. இதில் முன்னாள் தலைவரான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய ஆதரவாளரான சஞ்சய் சிங் 40 வாக்குகள் பெற்று வெற்றி பெற்று புதிய தலைவரானார்.

புதிய தலைவராக தேர்வான சஞ்சய் சிங்குக்கு மல்யுத்த வீரர், வீராங்கனைகளிடம் எதிர்ப்பு கிளம்பியது. இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவராக இருந்த பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய ஆதரவாளரான சஞ்ஜய் சிங் தேர்வானதையடுத்து சாக்ஷி மாலிக் மற்றும் பஜ்ரங் புனியா ஆகியோர் விளையாட்டிலிருந்து விலகினர். அவர்களைத் தொடர்ந்து மல்யுத்த வீரர் வீரேந்தர் சிங்கும் மல்யுத்த விளையாட்டில் இனி ஈடுபட போவதில்லை என அறிவித்தார். மேலும் அவர் தனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கப் போவதாக கூறினார். அதேபோல் பஜ்ரங் புனியா தனது விருதுகளை திருப்பி ஒப்படைத்தார். இந்தப் பின்னனியில் வினேஷ் போகத்தும் தனது விருதுகளை திரும்ப ஒப்படைத்துள்ளது கவனிக்கத்தக்கது.

# புதுக்கோட்டையில் காங்கிரஸ் கட்சியினர் புத்தாண்டு கொண்டாட்டம்



புதுக்கோட்டை ஜன. 1,

புதுக்கோட்டை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 2024 புத்தாண்டு கொண்டாடப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவித்து, கேக் வெட்டி இனிப்புகள் மற்றும் காலண்டர் வழங்கியும் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பெனட்அந்தோணிராஜ், வட்டார தலைவர் ராமையா, மாநில பேச்சாளர் ஆரோக்கியசாமி, மாவட்ட துணை தலைவர்கள் வேங்கை அருணாசலம், செம்பைமணி, வீர. துரைசிங்கம், நகர தலைவர் மதன் கண்ணன், பாருக் ஜெய்லானி, புதுக்கோட்டை வட்டார தலைவர் சூர்யா பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அனைவருக்கும் மாவட்ட தலைவர் முருகேசன் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அன்னவாசல் வட்டார தலைவர் சுப்பிரமணியன், தங்கசிவா, முகமது கனி, மாநில பொதுக்குழு உறுப்பினர் சக்தி ரங்கராஜன், அரிமளம் ராஜு, மகளிரணி தலைவர் சிவந்தி, கம்மங்காடு கருப்பையா உள்பட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.

# ஆங்கிலப் புத்தாண்டு முதல்வர் மு.க. ஸ்டாலின், தலைவர்கள் வாழ்த்து




சென்னை, ஜன. 1-

உலகம் முழுவதும் இன்று ஆங்கிலப் புத்தாண்டு தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழக முதல்வர் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**முதல்வர் ஸ்டாலின் :** புதிய சிந்தனை, புதிய இலக்குகளுக்கான வாசலைத் திறந்து வைத்து நம்பிக்கையின் ஒளிக்கதிர்களுடன் பிறக்கிறது இனிய புத்தாண்டு. பெரியார், அண்ணா, கருணாநிதி வழியில், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதிக்கான பயணத்தில் எத்தனை தடைகள் எதிர்ப்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து முன்னேறும் நமது திராவிட மாடல் அரசின் வெற்றிப் பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும். அதற்கான நம்பிக்கையும் உறுதியும் புத்தாண்டில் நிறைந்துள்ளது. “எல்லார்க்கும் எல்லாம்” என்ற நமது லட்சியம் நிறைவேறும் நிறைவான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையட்டும்.

**எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி :** மலருகின்ற புத்தாண்டில், மக்களுடைய துன்பங்கள் விலகி இன்பங்கள் பெருகவும்; அனைவரது வாழ்விலும் அன்பையும், மகிழ்ச்சியையும், நோய் இல்லாத வாழ்வையும், குறைவில்லாத செல்வத்தையும் வழங்கும் ஆண்டாக அமையவும், எல்லாம் வல்ல இறைவனை மனதார பிரார்த்தித்து, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரது நல்வழியில், மக்கள் அனைவருக்கும் உளங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

**பாமக நிறுவனர் ராமதாஸ் :** நாம் கடந்துவந்த கரடுமுரடான பாதைகள் முடிவுக்கு வந்து விட்டன. புத்தாண்டில் புதிய பாதை தெரியும்; புதிய வெளிச்சம் பிறக்கும். அவற்றின் உதவியுடன் 2024 ஆம் ஆண்டு நாம் எதிர்பார்த்ததைப் போலவே இனிப்பாக அமையும். அனைவருக்கும் அனைத்து நலன்களும், வளங்களும் கிடைக்கும்; பொருளாதாரம் வளரும்; மகிழ்ச்சி பெருகும்; அமைதியும், நிம்மதியும் கிடைக்கும்; அவற்றை சாதிக்க நாம் கடுமையாக உழைப்போம் என்று கூறி வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மதிமுக பொதுச் செயலாளர் வைகோ :** விவசாயிகளையும், சிறு குறு நிறுவனங்களையும், தமிழக மீனவர்களையும் பாதுகாப்பதற்கும், ஜனநாயகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கும் மத்தியில் ஒன்றிய அரசை இண்டியா கூட்டணி அமைக்கும் என்ற நிலையை உருவாக்க நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான உறுதி எடுத்துக்கொண்டு, இந்தியாவின் ஜனநாயகத்தைக் காப்போம்; கூட்டாட்சிக் கொள்கையைக் காப்போம்; மதச்சார்பின்மையைக் காப்போம் என சூளுரைத்து அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி :** பாஜக ஆட்சியில் மக்கள் படும் துன்பங்களில் இருந்து விடுவிக்க தலைவர் ராகுல்காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை முதல்கட்ட இந்திய ஒற்றுமை பயணத்தை மேற்கொண்டார். அந்த பயணத்தின் மூலம் பாஜகவுக்கு எதிராக 28 கட்சிகள் ஒன்று சேர்ந்து இண்டியா கூட்டணியை அமைத்திருக்கின்றன. அதற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் மீண்டும் பாரத நியாய யாத்திரையை ஜனவரி 14 ஆம் தேதி ராகுல்காந்தி மணிப்பூரில் தொடங்கி, மார்ச் 20 அன்று மும்பையில் நிறைவு செய்கிறார். இந்த நடைபயணத்தின் மூலம் பாஜக ஆட்சி அகற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையின் தொடக்கமாக வருகிற ஆங்கில புத்தாண்டு அமைய இருக்கிறது.

**முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் :** அகம்பாவம், ஆணவம், துரோகம், கொடூரச் சிந்தனை, நாகரிகமற்ற பேச்சு போன்றவை அகன்று, ஒழுக்கம் என்னும் மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்களான அன்பு, அமைதி, எளிமை, சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவை வளரும் ஆண்டாக 2024 ஆம் ஆண்டு மலரட்டும். வலிமையான பாரதம், வளமான தமிழகம் உருவாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திட இந்தப் புத்தாண்டில் உறுதி ஏற்போம்.

**மநீம தலைவர் கமல்ஹாசன் :** பிறக்கவிருக்கிறது புதிய ஆண்டு. அர்ப்பணிப்புணர்வுடன் தொடர்ச்சியான செயல்பாடுகளால், தளராத முயற்சிகளால் புதிய உயரங்களை அடையும் வாய்ப்பாக புத்தாண்டை ஆக்குவோம். புதுப்பொலிவை, புது வளர்ச்சியை, புதுச் சவால்களை, புது வெற்றிகளை எதிர்கொள்வோம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

**பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் :** தமிழ்நாட்டின் வரலாற்றில் 2024 ஆம் ஆண்டு தவிர்க்க முடியாத ஆண்டாக அமையப்போவது நிச்சயம். அரசியல், சமூகநீதி, வாழ்வுரிமை உள்ளிட்ட பல துறைகளில் கடந்த ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட பல தவறுகள் புத்தாண்டில் திருத்தப்படும். தங்களின் நலனுக்காகவும், தங்களின் உரிமைகளுக்காகவும் உண்மையாக போராடக்கூடியவர்கள் யார்? என்பதை மக்கள் அறிந்து அங்கீகரிக்கும் ஆண்டாக அமையும்.

**அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் :** மழை, வெள்ளம், புயல் என பேரிடர்களால் பெரும் பாதிப்பைச் சந்தித்திருக்கும் தமிழக மக்கள் அனைவரின் பொருளாதாரத்தை மீட்கும் ஆண்டாகவும், பொய்த்துப் போன பருவமழை, வரலாறு காணாத வறட்சி, இயற்கைப் பேரிடர்கள் என தன் வாழ்க்கை முழுவதும் துயரத்தை மட்டுமே அனுபவித்து வரும் உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஆண்டாக புத்தாண்டு அமையும் என நம்புகிறேன். மலரும் புத்தாண்டு தமிழக மக்களுக்கு உயர்வான வாழ்க்கையையும், நீங்காத வளங்களையும், நிறைவான மகிழ்ச்சி மற்றும் மன உறுதியைத் தரும் ஆண்டாக அமையட்டும்.

**தமாகா தலைவர் ஜி.கே. வாசன் :** நேர்மையான, வெளிப்படையான, ஊழலற்ற, நல்லாட்சி நடைபெறவும், ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்வு மேம்படவும் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் மத்திய மாநில அரசுகளும், பொது மக்களும் உறுதி ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். வளமான தமிழகம், வலிமையான பாரதம் உருவாகும் வகையில், உலக நாடுகளின் ஒற்றுமை மேலோங்கும் வகையில் இப்புத்தாண்டு அமைய வேண்டும்.

**சமக தலைவர் சரத்குமார் :** கடந்த கால இன்னல்கள் நீங்கி, தமிழக மக்கள் வாழ்வில் ஏற்றமும், அனைத்து வளங்களும், நலங்களும் பெற்று சீரும், சிறப்புமாக வாழ்ந்திட வேண்டியும், சாதி, மத, இன, மொழி, பேதமற்ற சமத்துவ சமுதாயம் அமைக்க பாடுபடுவோம் என உறுதியேற்றும் அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளை என் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காங்கிரஸ் எம்.பி. திருநாவுக்கரசர் :** இந்தியப் பொருளாதார நலிவு நீங்கி, வறுமை அகன்று, தொழில் பெருகி, வேலை வாய்ப்பு கூடி, விவசாயப் பெருங்குடி மக்கள் உரிய வருமானம் அடைந்து, உழைப்போர் உயர்ந்து, இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிட்டி, அனைத்து தரப்பு மக்களின் வாழ்வில் வளமும், நலமும் பெருகிடவும், ஜாதி - மத பேதமின்றி மகிழ்வுடன் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய் வாழ்ந்திடவும், இவ்வாண்டில் இந்திய மக்களின் வாழ்வு உயர, வளம் பெருக, உலக அரங்கில் இந்தியா மிளிர, உயர அனைவரும் பாடுபட சபதமேற்போம்.

# ஜனவரி 15ல் நடைபெறுகிறது மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி அரசு சார்பில் ஏற்பாடுகள் தீவிரம்

மதுரை , ஜன. 1-

அரசு சார்பில் நடத்தப்படும் தமிழகத்தின் முதல் போட்டியான அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் தொடங்கின. பாலமேடு, அலங்காநல்லூரிலும் வாடிவாசல், கேலரிகள் அமைப்பதற்கான முன் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழர்களின் பண்பாட்டையும் வீரத்தையும் வெளிப்படுத்தும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள், தென் மாவட்டங்களில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பாரம்பரியமாக நடத்தப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 350-க்கும் மேற்பட்ட இடங்களில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெற்றாலும், மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலக புகழ்பெற்றவை.

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 வாரங்களே உள்ள நிலையில், காளைகளுக்கு அதன் உரிமையாளர்கள் தீவிர பயிற்சி அளித்து வருகின்றனர். அதேபோல், மாடுபிடி வீரர்களும் காளைகளை அடக்க பயிற்சி பெற்று வருகின்றனர். அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் போட்டிகளுக்கான ஏற்பாடுகளையும், பார்வையாளர்களுக்கான வசதிகளையும், பாதுகாப்பையும் செய்து கொடுப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா தலைமையில் கடந்த 23-ம் தேதி நடந்தது. இக்கூட்டத்தில் மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், மாநகராட்சி காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் மற்றும் வருவாய்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மருத்துவத்துறை அதிகாரிகள் மற்றும் விழா கமிட்டியினர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் அரசு சார்பில் நடத்தப்படும் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி அவனியாபுரத்தில் 15ம் தேதி பொங்கல் நாளில் நடைபெறுகிறது. 16ம் தேதி பாலமேடு, 17ம் தேதி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகள் அடுத்தடுத்து நடக்க இருக்கின்றன. அவனியாபுரம் போட்டிக்கான ஏற்பாடுகளை மாநகராட்சி செய்து வருகிறது. அவனியாபுரத்தில் நிரந்தர வாடிவாசல், கேலரிகள் கிடையாது. அதனால், வாடிவாசல், பார்வையாளர்கள் அமரும் கேலரி, மாடுகள் நிறுத்தப்படும் இடம், விழாவின் சிறப்பு விருந்தினர்கள் அமரும் விழா மேடை மற்றும் பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கான பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள மாநகராட்சி வரும் ஜனவரி 4ம் தேதி டெண்டர் விட உள்ளது. டெண்டர்கள் எடுப்போர், ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகள், அதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வார்கள். இந்த போட்டியில் 700க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



போட்டியில் பங்கேற்கும் தகுதியான காளைகளை தேர்வு செய்வதற்கான காளைகள் முன்பதிவு, மருத்துவப் பரிசோதனை விரைவில் தொடங்க இருக்கிறது. பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்கான வாடிவாசல் நிரந்தரமாகவே உள்ளது. அதனால், வாடிவாசலையும், கேலரிகள் அமைப்பதற்கான இடத்தையும் தயார்படுத்துவதற்கான பணிகள் தொடங்கி நடக்கின்றன. அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் ஒவ்வொரு ஆண்டும் வெற்றிப்பெறும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு கார், பைக், ஒவ்வொரு சுற்றிலும் வெற்றிப்பெறும் வீரர், காளைகளுக்கு வழங்கப்படும் தங்க நாணயங்கள், பீரோ, கட்டில், வாஷிங் மிஷின், மிக்ஸி போன்ற பல்வேறு பரிசுகள் இந்த ஆண்டும் வழங்கப்பட உள்ளன.

மாநகராட்சி மேயர் இந்திராணி கூறுகையில், ‘‘கடந்த ஆண்டு அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் உயிரிழப்பு, பெரிய காயம் ஏற்படவில்லை. அதுபோன்று வெற்றிகரமாக இந்த ஆண்டு காயமே ஏற்படாத ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன. பார்வையாளர்கள் அமருவதற்கான பாதுகாப்பான கேலரிகள், கழிப்பறை, குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். காயமடைந்தால் முதலுதவி சிகிச்சை வழங்குவதற்கான தற்காலிக மருத்துவமனைகள், மருத்துவக்குழுவினர் நியமிக்கும் பணிகள் நடக்க உள்ளது. சிசிடி காமிராக்கள் பொருத்தப்பட்டு அதன் மூலம் போட்டிகள் சிறப்பாக நடத்த திட்டமிட்டுள்ளோம். ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான பணிகளை மேற்கொள்ள மாநகர பொறியாளர் தலைமையில், நகர் அலுவலர், சுகாதாரப் பணியாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.50 லட்சம் செலவில் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்’’ என்றார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ரபாடாவின் இன்ஸ்விங்கை சமாளிக்க முகேஷ்குமார் பவுலிங்கில் 45 நிமிடம் ரோகித் சர்மா பேட்டிங் பயிற்சி

**கேப்டவுன் : ஜன. 1, தென் ஆப்ரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகிறது. இதில் செஞ்சூரியனில் நடந்த முதல் டெஸ்ட்டில் இந்தியா இன்னிங்சிஸ் மற்றும் 32 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த நிலையில் 2வது டெஸ்ட் கேப்டவுனில் வரும் 3ம் தேதி தொடங்குகிறது. முதல் டெஸ்ட்டில் இந்தியா படுதோல்வியை அடைந்ததால் விமர்சனங்கள் எழுந்த நிலையில் 2வது டெஸ்ட்டில் பதிலடி கொடுக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளது.**



இதற்காக வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக வெளிநாடுகளில் டெஸ்ட்டில் சொதப்பி வரும் கேப்டன் ரோகித்சர்மா, முகேஷ்குமாரின் பந்துவீச்சில் 45 நிமிடம் பேட்டிங் பயிற்சியில் ஈடுபட்டார். 4 மற்றும் 6 மீட்டர் பகுதிகளுக்கு தொடர்ந்து பந்துவீச வைத்து பயிற்சி மேற்கொண்டார். முதல் டெஸ்ட்டில் ரபாடா வீசிய இன்கமிங் பந்துகளில் தடுமாறிய நிலையில் அதனை சமாளிப்பதற்காக அவர் இவ்வாறு பயிற்சி மேற்கொண்டார்.

2வதுடெஸ்ட்குறித்துஅவர் கூறுகையில், முதலாவது டெஸ்ட்டில் நாங்கள் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் தோல்வியை சந்தித்தோம். அதிலும் குறிப்பாக மூன்று நாட்களுக்குள் இப்படி ஒரு தோல்வியை ஏற்றுக் கொள்வது கடினமாகவே உள்ளது.

கே.எல் ராகுலை தவிர்த்து மற்ற வீரர்கள் சிறப்பாக செயல்படவில்லை. மேலும் இங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியம். அந்த வகையில் நிச்சயம் இரண்டாவது போட்டிக்கு முன்னதாக சிறப்பான முறையில் தயாராகி வெற்றி பெறும் வகையில் விளையாடுவோம், என்றார். இதனிடையே பயிற்சியின்போது இடது தோள் பட்டையில் காயம் அடைந்த ஆல்ரவுண்டர் ஷர்துல் தாகூர் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராசியில்லாத மைதானம்: 2வது டெஸ்ட் நடக்கும் கேப்டவுன் நியூலேண்ட்ஸ் மைதானம் இந்தியாவுக்கு ராசியில்லாத மைதானமாகும். இங்கு தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக 6 டெஸ்ட்டில் ஆடி உள்ள இந்தியா 4ல் தோல்வி அடைந்துள்ளது. 2 டெஸ்ட் டிராவில் முடிந்துள்ளது. கடந்த ஆண்டு ஜனவரியில் நடந்த டெஸ்ட்டில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகுவதற்கு மல்யுத்த போட்டிகளை தொடங்க வேண்டும்

## பஜ்ரங் பூனியா கோரிக்கை

**புதுடெல்லி : ஜன. 1, பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இன்னும் 7 மாதங்களே உள்ளதால் இந்திய மல்யுத்த நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பஜ்ரங் பூனியா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்திய மல்யுத்த சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்குக்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள், வீரர்கள் நடத்திய போராட்டங்களை தொடர்ந்து கடந்த சில மாதங்களாக மல்யுத்த நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. மல்யுத்த சம்மேளனத்தின் புதிய தலைவராக சஞ்ஜய் சிங் தேர்வான நிலையில், அவர் விதி முறைகளை மீறியதாக கூறி ஒட்டு மொத்த சம்மேளனத்தையும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் சஸ்பெண்ட் செய்தது.

இந்நிலையில் ஒலிம்பிக்கில்பதக்கம்மல்யுத்த வீரரும், போராட்டத்தில் பங்கேற்றவருமான பஜ்ரங் பூனியா தனது எக்ஸ்வலைதள பதிவில், "கடந்த சில மாதங்களாக மல்யுத்த நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்குவீரர்களைத் தயார் செய்வதற்காக எந்தவொரு தேசிய அளவிலான போட்டிகளுக்கும், பயிற்சி முகாம்களுக்கும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

7 மாதங்களில் ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது. ஆனால் யாரும் இதைபற்றி தீவிரமாக எடுத்துக்கொள்வதாக தெரியவில்லை. கடந்த 4 ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ச்சியாக 4 பதக்கங்களை மல்யுத்தம் வழங்கி உள்ளது. எனவே, வீரர்களின் எதிர்காலத்தை காப்பாற்றும் வகையில் அனைத்து மல்யுத்த நடவடிக்கைகளையும் விரைவில் தொடங்குமாறு மத்திய விளையாட்டு அமைச்சகத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



# இவர்கள் இரண்டு பேரும்தான் கிரிக்கெட்டின் வருங்கால ஜாம்பவான்கள்

## முன்னாள் கேப்டனின் கணிப்பு

**இங்கிலாந்து : ஜன. 1, உலக கிரிக்கெட்டில் வருங்காலத்தில் ஜாம்பவான்களாக மாறக்கூடிய இரண்டு இளம் வீரர்களை இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டனான நாசர் உசேன் தேர்வு செய்துள்ளார். அவரது தேர்வினை பலரும் பாராட்டி வருகின்றனர்.**

2023ம் ஆண்டு முடிவடையும் சூழலில் இந்த ஆண்டு சிறப்பாக செயல்பட்ட வீரர்கள் மற்றும் வருங்காலத்தில் ஜொலிக்கப்போகும் வீரர்கள் குறித்து பல்வேறு கணிப்புகள் வெளியாகி வருகின்றன. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அதாவது ஐசிசி வெளியிட்டுள்ள வீடியோவில், இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டனான நாசர் உசேன் இரண்டு இளம் கிரிக்கெட் வீரர்களை கிரிக்கெட்டின் எதிர்கால ஜாம்பவான்கள் என குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தொடக்க ஆட்டக்காரரர் சுப்மன் கில் மற்றும் நியூசிலாந்து ஆல்ரவுண்டர் ரச்சின் ரவீந்திரா ஆகியோர் எதிர்கால நட்சத்திரங்களாக மாறுவதற்கான அனைத்து தகுதிகளையும் கொண்டுள்ளனர் என்று நாசர் உசேன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த இரண்டு வீரர்களையும் தேர்வு செய்தேன் என்பதற்கான காரணத்தையும் உசேன் விளக்கமாக கூறியுள்ளார். அதில் சுப்மன் கில் தேர்வு செய்ததற்கான காரணம் என்னவென்றால், அவர் 3 வடிவ கிரிக்கெட்களிலும் சிறப்பான வீரர். சமீப காலம் தவிர இந்த ஆண்டு சிறப்பாக விளையாடி உள்ளார். உலக கோப்பைக்கு முன்னதாக உடல்நிலை குறைவு காரணமாக அவர் ஒரு படி பின்வாங்கினார். இருப்பினும் அடுத்த ஆண்டு அவரிடம் இருந்து இன்னும் நல்ல இன்னிங்ஸ் வரும் என்று கூறினார். சர்வதேச கிரிக்கெட்டில் இந்த காலண்டர் ஆண்டில் அதிக ரன் எடுத்த வீரர் என்ற பெருமையை கில் பெற்றுள்ளார். மேலும் வரப்போகும் இன்னும் பல ஆண்டுகளுக்கு அவர் இந்தியாவின் அடுத்த நட்சத்திரமாக ஜொலிக்கப் போகிறார் எனவும் தெரிவித்தார்.

சமீபத்தில் முடிவடைந்த ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பை 2023ன் மிகப்பெரிய நட்சத்திரங்களில் ஒருவராக ரச்சின் ரவீந்திரா உருவெடுத்துள்ளார். ஒருநாள் உலகக் கோப்பை போன்ற மெகா தொடரில் முதல்முறையாக எல்லோராலும் அற்புதமாக விளையாடுவது சாத்தியம் இல்லை. ஆனால் அந்த தொடரில் பெரும்பாலான போட்டிகளில் மிகச்சிறப்பாக ஆடி, ரச்சின் ரவீந்திரா மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர் என்பதை நிரூபித்தார். அதனைத் தொடர்ந்து இங்கிலாந்திலும் சிறப்பாக செயல்பட்டார். இந்த பாணியை வெளிப்படுத்தினால் அவர் நிச்சயமாக மற்றொரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரராக மாறுவார் என தெரிவித்தார்.

இந்த ஆண்டு 47 சர்வதேச போட்டிகளில் சுப்மன் கில் 48.31 சராசரியில் 2,126 ரன்கள் எடுத்தார். இதில் ஏழு சதங்கள் மற்றும் 10 அரைசதங்கள் அடங்கும். இந்த ஆண்டு 6 டெஸ்டில் ஒரு சதத்துடன் 28.66 சராசரியில் 258 ரன்கள் எடுத்தார். அவரது சிறந்த ஸ்கோர் 128 ஆகும். 29 ஒருநாள் போட்டிகளில், கில் 1,584 ரன்களை சராசரியாக 63.36 மற்றும் ஸ்ட்ரைக் ரேட் 105க்கு மேல் எடுத்தார். இந்த நேரத்தில் அவர் ஐந்து சதங்கள் மற்றும் ஒன்பது அரைசதங்களையும் அடித்தார். அவரது சிறந்த ஸ்கோர் 208 ஆகும். ஆனால் சுப்மன் கில் டி20யில் 2023ம் ஆண்டு சரியாக விடையாடவில்லை. 13 இன்னிங்ஸ்களில் 26 சராசரியில் ஒரு சதம் மற்றும் ஒரு அரைசதத்துடன் 312 ரன்கள் மட்டுமே எடுத்தார். ஆட்டமிழக்காமல் 126 ரன்கள் எடுத்ததே அவரது சிறந்த ஸ்கோர் ஆகும்.



ரச்சின் ரவீந்திரா உலகக் கோப்பையில் 10 போட்டிகளில் 106.44 என்ற சராசரியில் 578 ரன்களுடன் நான்காவது அதிக ரன் எடுத்தவர் என்ற பெருமையை பெறார். இந்த தொடரில் அவர் மூன்று சதங்களையும், இரண்டு அரைசதங்களையும் அடித்தார். இந்த ஆண்டு 37 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 36.44 சராசரியில் 911 ரன்கள் குவித்துள்ளார் ரச்சின். 110க்கு மேல் ஸ்ட்ரைக் ரேட்டில் ரன்களை அடித்தார் அவர். இந்த காலகட்டத்தில் அவர் மூன்று சதங்கள் மற்றும் மூன்று அரைசதங்களையும் அடித்தார். ஆட்டமிழக்காமல் 123 ரன்கள் எடுத்ததே அவரது சிறந்த ஸ்கோர் ஆகும். பேட்டிங் மட்டுமின்றி பவுலிங்கிலும் கலக்கும் ஆல்ரவுண்டரான இவர் இந்த ஆண்டு அனைத்து வடிவ போட்டிகளிலும் 23 விக்கெட்டுகளை வீழ்த்தியும் அசத்தியுள்ளார்.

வரலாறு சினிமா

# மதிமாறன் – திரை விமர்சனம்

**சென்னை : ஜன : 1, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கிறார் நெடுமாறன் (வெங்கட் செங்குட்டுவன்). அவர் உயரம் சராசரிக்குக் குறைவாக இருப்பது ஒருகுறைபாடாக உணராத வகையில் தந்தையும் (எம்.எஸ்.பாஸ்கர்) சகோதரி மதியும் (இவானா) அவர் மீது அன்பு செலுத்துகிறார்கள்.**



கல்லூரியில் படிக்கும்போது பேராசிரியரைக் காதலித்து சென்னைக்குச் சென்றுவிடுகிறார் மதி. இதனால் மதி-நெடுமாறனின் பெற்றோர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அக்காவைத் தேடி சென்னைக்கு வருகிறான் நெடுமாறன். சென்னையில் அடுத்தடுத்து பெண்கள் சிலர் கொல்லப்படுவது மற்றும் காணாமல் போவது ஆகியவற்றுக்குப் பின்னால் உள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் காவல்துறை திணறுகிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுகிறார் நெடுமாறன். குற்றவாளிகள் யார்? நெடுமாறனுக்கும் அவன் சகோதரி மதிக்கும் நடப்பது என்ன? என்பதைச் சொல்கிறது மீதிக் கதை.

உயரக் குறைவு, குறைபாடு அல்ல என்பதையும் உருவக் கேலி இழிவானது என்பதையும் அழுத்தமாகப் பதிவு செய்திருப்பதற்காகவே அறிமுக இயக்குநர் மந்திரா வீரபாண்டியனைப் பாராட்டலாம். உயரம் குறைவான நாயகனைப் பரிதாபத்துக் குரியவராகவோ, திறமை கொண்ட சாதனையாளராகவோ சித்தரிக்காமல் இயல்பான மனிதனாகக் காண்பித்திருப்பது வரவேற்கத்தக்க மாற்றம். எமோஷனல், த்ரில்லர் என இரண்டு வகைமைகளையும் உள்ளடக்கிய கதையைத் தொய்வின்றி சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் வெகுஜன ரசனைக்குரிய படமாகவும் இது தேறுகிறது.

அதே நேரம் தொடர் கொலைகளுக்குப் பின்னால் உள்ளவர்களை நாயகன் கண்டுபிடிக்கக் கிளம்புவதற்கான காரணம் வலுவாகச் சொல்லப்பட்டிருக்கலாம். அது இல்லாததால் இரண்டாம் பாதியில் த்ரில்லர் பாணிக்குத் திரைக்கதை தடம் மாறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. கொலையாளியை நாயகன் கண்டுபிடிப்பது நம்பகத்தன்மையுடனும் சுவாரசியமாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு குற்றவாளியைக் கண்டுபிடித்த பிறகு இன்னொரு குற்றவாளி இருப்பதாகச் சொல்லி காட்சிகளை நீட்டித்திருப்பது தேவையற்றத் திணிப்பு. ஆனாலும் மொத்தப் படமும் 2 மணி நேரத்தில் முடிந்துவிடுவதால் இந்தக் குறைகள் தொந்தரவாக இல்லை.

அறிமுக நடிகர் வெங்கட் செங்குட்டுவன் வரவேற்கப்பட வேண்டியவர். புதுமுகம் என்று நம்ப முடியாத பங்களிப்பைத் தந்திருக்கிறார். முற்போக்கு எண்ணங்கள் கொண்ட தபால் ஊழியராக, தன்குழந்தைகள் மீது பேரன்புகொண்ட தந்தையாக எம்.எஸ்.பாஸ்கர் வழக்கம்போல் முத்திரை பதிக்கிறார். இவானா, நாயகனின் தோழியாகவும் காவல்துறை அதிகாரியாகவும் வரும் ஆராத்யா இருவரும் குறையற்ற நடிப்பைத் தந்திருக்கிறார்கள். காவல்துறை ஆணையராக ஆடுகளம் நரேனும் அடுக்குமாடி குடியிருப்பு பாதுகாவலராக பவா செல்லதுரையும் கவனம் ஈர்க்கிறார்கள்.

வசனங்கள் படத்துக்குப் பெரிய பலம். ‘உசரத்துல என்ன இருக்கு உசுருதான் முக்கியம்’ என்னும் ஒற்றைவசனம் படத்தின் உயரிய நோக்கத்தை அழகாகக் கடத்திவிடுகிறது. கார்த்திக்ராஜாவின் இசையில் பாடல்கள் இனிமை. பின்னணி இசையும் சரியான உணர்வுகளைக் கடத்துவதில் வெற்றிபெற்றிருக்கிறது. குறைகளைக் கடந்து மனதைக்கவர்கிறான் ‘மதிமாறன்’.

# ஆஹா தளத்தில் வெளியாகும் ‘செவப்பி’



**சென்னை : ஜன. 1, கிராமத்தில் வசிக்கும் ஐந்து வயது சிறுவனைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை வைத்து உருவாகி இருக்கும் படம், ‘செவப்பி’.**

இதை ராஜேஷ்வர் காளிசாமி, பிரசன்னா பாலச்சந்திரன் தயாரித்துள்ளனர். எம்.எஸ்.ராஜா எழுதி இயக்கியிருக்கிறார். பூர்ணிமா ரவி, ரிஷிகாந்த், ராஜாமணி பாட்டி, ஷ்ரவன் அத்வேதன், டில்லி, செபாஸ்டியன் ஆண்டனி உட்பட பலர் நடித்துள்ளனர். மனோகரன் எம் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு ஏ.பிரவீன் குமார் இசை அமைக்கிறார்.

ஒரு கோழியை நேசத்தோடு வளர்க்கிறான் சிறுவன். ஒரு கட்டத்தில் அதைப் பிரிய நேரிடுகிறது. இதனால் ஒன்றாக வாழும் அந்தக் கிராமம் இரண்டாகப் பிரிந்து மோதிக்கொள்கிறது. இறுதியில் அந்தச் சிறுவனும் கோழியும் ஒன்று சேர்ந்தார்களா? என்பது கதை. கேரளாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே உள்ள மத்திபாளையம் என்ற கிராமத்தில் இதன் படப்பிடிப்பு நடந்துள்ளது. ஜன. 12-ம் தேதி ஆஹா தமிழ் ஓடிடி தளத்தில் இந்தப் படம் நேரடியாக வெளியாகிறது.

# மூத்தகுடி – திரை விமர்சனம்

**சென்னை : ஜன. 1, குடிப்பழக்கத்தால் குடும்பத் தலைவர் இறந்ததால், இனி ஊருக்குள் யாரும் குடிக்கக்கூடாது, மதுக்கடைகள்திறக்கக்கூடாது என்ற கட்டுப்பாடுடன் ஊரைப் பாதுகாக்கிறார், மூத்தகுடியின் பெரியதலைவி மூக்கம்மா (கே.ஆர்.விஜயா).**





அதே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் வீரய்யன் (தருண்கோபி), தம்பி அய்யாதுரை (பிரகாஷ்சந்திரா) ஆகியோர், ஒரே முறைப்பெண் ஜோதியை (அன்விஷா) காதலிக்கின்றனர். ஆனால், ஜோதிக்கு அய்யாதுரை மீது மட்டுமே காதல். இதனால் மனம் வெறுக்கும் வீரய்யன், ஊருக்குள் சாராய பேக்டரி கொண்டு வர முயற்சிக்கும் வில்லன்செந்தூரபாண்டியுடன் (ராஜ்கபூர்) கூட்டணி அமைக்கிறார். சாராய பேக்டரிதிறந்து, மூத்தகுடியின் பெருமையைக் குலைக்க முயற்சிக்கிறார். அது நடந்ததா என்பது மீதி கதை.

‘மதுப்பழக்கத்தை அரசால் மட்டும் ஒழிக்க முடியாது. ஒவ்வொரு ஊரும் சுயக்கட்டுப்பாடு கொண்டு வந்து ஒழிக்க வேண்டும்’ என்ற கருத்தை வலியுறுத்தி படத்தை இயக்கியுள்ளார், ரவி பார்கவன். கருத்து சரியானதாக இருந்தாலும், திரையில் சொன்னவிதம் நாடகத்தன்மையுடன் இருக்கிறது. தருண்கோபி ஓவர் ஆக்டிங் செய்துள்ளார். பிரகாஷ் சந்திரா கேரக்டரை உணர்ந்து இயல்பாக நடித்துள்ளார். அன்விஷா கிராமத்து அழகான பெண்ணாக வந்துசெல்கிறார். கே.ஆர்.விஜயாவுக்கு அதிக வேலை இல்லை. யார் கண்ணன் சொன்னதைச் செய்திருக்கிறார். ஆர். சுந்தர்ராஜனும், சிங்கம்புலியும் காமெடி என்ற பெயரில் அலப்பறை செய்கின்றனர். கந்தா ரவிச்சந்திரனின் ஒளிப்பதிவு பளிச். ஜே.ஆர். முருகானந்தத்தின் இசை அதிக கவனம் பெறவில்லை.

வில்லன் ராஜ்கபூர், மூத்தகுடியில் மதுக்கடை திறக்க நினைக்கிறாரா? மது பேக்டரி கொண்டு வர முயற்சிக்கிறாரா என்பதில் குழப்பம். இரண்டையும் தனி நபரால் கொண்டு வர முடியாது என்பது யதார்த்தம். கிளைமாக்சில் நடக்கும் சம்பவங்களில் லாஜிக் இல்லை. நல்ல கருத்தைப் படமாக்கியவர்கள், அதை இன்னும் நல்லவிதமாக உருவாக்கி இருக்கலாம்.

# நடிகர் சுரேஷ்கோபி முன் ஜாமீன் கேட்டு மனு

**திருவனந்தபுரம் : ஜன. 1, பிரபல மலையாள முன்னணி நடிகர் சுரேஷ்கோபி. இவர் தமிழில், அஜித்தின் தீனா, ஷங்கர் இயக்கிய ஐ, விஜய் ஆண்டனி நடித்த ‘தமிழரசன்’ ஆகிய படங்களில் நடித்துள்ளார். பாஜக பிரமுகரான இவர், மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.**



கடந்தசிலமாதங்களுக்கு முன் இவர் கோழிகோட்டில் பேட்டியளித்தார். அப்போது, கேள்வி கேட்ட பெண் பத்திரிகையாளரின் தோளில் கை வைத்தார். அவர் கையைத் தட்டிவிட்டபோதும் சுரேஷ்கோபி மீண்டும் அவர் தோளைத் தொட்டு பேசினார். இது தொடர்பான வீடியோ வெளியாகி பரபரப்பானது. பின்னர் இதற்காக அவர் மன்னிப்பு கேட்டார்.

இந்நிலையில் அந்தச் செய்தியாளர், கோழிக்கோடு நடக்காவு போலீஸ் நிலையத்தில் சுரேஷ்கோபி மீது புகார் செய்தார். போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். இந்நிலையில் இந்த வழக்கில் போலீஸார் தன்னை கைது செய்யாமல் இருக்க, கேரள உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு, சுரேஷ்கோபி மனு தாக்கல் செய்துள்ளார்.

# வெளியானது ‘தளபதி 68’ படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் : படத்தின் பெயர் இதுதான்

**சென்னை : ஜன. 1, நடிகர் விஜய் நடிப்பில் உருவாகி வரும் 68 வது திரைப்படத்திற்கு ’தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. நேற்று வெளியான படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை ரசிகர்கள் உற்சாகமாக பகிர்ந்து வருகின்றனர்.**




இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கத்தில், ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில், நடிகர் விஜய் நடிக்கும் 68வது திரைப்படம் தற்காலிகமாக தளபதி 68 என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்த படத்தின் பெயரை அறிவிக்க வேண்டும் என ரசிகர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்த நிலையில், சில நாட்களுக்கு முன்பு சமூக வலைதளங்களில் வெவ்வேறு பெயர்கள் ரசிகர்களால் பகிரப்பட்டு வந்தது. ஆனால் இந்த தகவல்களை ஏஜிஎஸ் நிறுவனம் மறுத்து இருந்தது.

இந்த நிலையில் நேற்று திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி நடிகர் விஜய், வெங்கட் பிரபு, ஏஜிஎஸ் நிறுவனம் ஆகியோர் எக்ஸ் தளத்தில் மாலை 6 மணி அளவில் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளனர். இதில் இரண்டு கதாபாத்திரங்களில் விஜய் நடிப்பது போன்று போஸ்டர் அமைந்துள்ளது. இருவரும் விமானிகளாக இந்த புகைப்படங்களில் தோன்றுகின்றனர். இதனால் இந்த படத்தில் விஜய் விமானியாக நடித்திருப்பார் என்று ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே மாநாடு திரைப்படத்தில் டைம் லூப் என்ற சயின்ஸ் பிக்சன் கதையை தேர்வு செய்திருந்த வெங்கட் பிரபு, இந்த திரைப்படத்திலும் அதே போன்ற கதைக்களத்தை தேர்ந்தெடுத்திருப்பதாக ஏற்கெனவே தகவல் வெளியாகியிருந்தது. தற்போது அதனை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு விஜய் இருக்கும் புகைப்படத்தை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டரை தங்களது சமூக வலைதள பக்கங்களில் பகிர்ந்து ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்தத் திரைப்படத்தில், விஜய்யுடன் நடிகர்கள் பிரசாந்த், பிரபுதேவா, சினேகா, லைலா, மீனாட்சி சௌத்ரி, மோகன், ஜெயராம், அஜ்மல், யோகி பாபு, விடிவி கணேஷ், வைபவ், பிரேம்ஜி அமரன், அரவிந்த் ஆகாஷ், அஜய்ராஜ் உள்ளிட்ட பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்து வருவது குறிப்பிடத்தக்கது. படத்திற்கு யுவன்சங்கர்ராஜா இசை அமைத்துள்ளார். சித்தார்த்தா நுனி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

# வரலாறு உலகம்

## காசா மீதான போர் பல மாதங்கள் நீடிக்கும் இஸ்ரேல் பிரதமர் சொல்கிறார்



**ஜெருசலேம் : ஜன. 1,**
**இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு இடையே போர் 2 மாதங்களுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. ஹமாஸ் நிர்வகித்து வரும் காசாமுனை பகுதி முழுவதும் இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது.**

இதில் குழந்தைகள் பெண்கள் உள்பட 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர். போரால் காசாவில் உணவு, குடிநீர், மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் தவித்து வருகிறார்கள். காசா மீதான போரை உடனே நிறுத்தும்படி இஸ்ரேலுக்கு ஐ.நா. மற்றும் பல நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் அதை இஸ்ரேல் கண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறும்போது, 'காசாவில் ஹமாஸுக்கு எதிரான போர் இன்னும் பல மாதங்களுக்கு தொடரும். இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காசாவில் இன்னும் பிணைக் கைதிகளாக உள்ள அனைத்து இஸ்ரேலியர்களையும் வீட்டிற்கு அழைத்து வர உறுதியளிக்கிறேன். இஸ்ரேல் ராணுவம் ஒரு சிக்கலான சண்டையில் ஈடுபட்டுள்ளது. அதன் இலக்குகளை அடைய நேரம் தேவை. ஹமாஸ் அகற்றப்பட்டு பணயக்கைதிகள் திரும்பும் வரை போர் பல மாதங்களுக்கு தொடரும். காசா இனி இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்று நாங்கள் உத்தரவாதம் அளிப்போம். நாங்கள் படிப்படியாக ஹமாசின் திறன்களை அழித்து வருகிறோம். அந்த அமைப்பின் தலைவர்களையும் ஒழிப்போம் என்று கூறினார்.

## ஹமாஸ் சுரங்கப்பாதையை அழித்தது இஸ்ரேல் கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் உயிரிழப்பு



ஜெருசலேம் : ஜன. 1,
இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் 7-ம் தேதி காசா முனையில் செயல்படும் ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் போன்ற ஆயுதக்குழுக்கள் தீவிரவாத தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் இஸ்ரேலைச் சேர்ந்த 1,200 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்தி சென்றனர். இந்த தாக்குதலை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் போர் அறிவித்து தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது.

இதுவரை நடந்த இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் மட்டும் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு பதிலடியாக காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 20 ஆயிரத்து 424 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. காசா முனையில் தரைவழி தாக்குதலின்போது ஹமாஸ் ஆயுதக்குழுவுடன் நடந்த மோதலில் இதுவரை இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் 157 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளையில், பாலஸ்தீனத்தின் மேற்குகரையிலும் வன்முறை வெடித்துள்ளது. காசா மேற்கு கரையில் இதுவரை 303 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசா முனையில் உள்ள பணய கைதிகளில் 100க்கும் மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. ஆனாலும், இன்னும் 129 பேர் காசாவில் பணய கைதிகளாக உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. பணய கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டு வருகிறது.

இந்த சூழலில் வெள்ளிக்கிழமை ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கப்பாதை வளாகத்தை இஸ்ரேல் படைகள் கண்டு தாக்குதல் நடத்தி அழித்தனர். மேலும் அங்கு நடந்த தாக்குதலில் 200 பேர் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. மத்திய காசா பகுதியிலுள்ள நுசைரத் கேம்ப் பகுதியில் தொடர்ந்து வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாக பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததன் மூலம் காசா பகுதியில் இஸ்ரேல் படைகள் முன்னேறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலண்ட் கூறியதாவது:

இஸ்ரேல் படைகள், ஹமாஸின் சுரங்கப்பாதை வளாகத்தை கடும் தாக்குதல் நடத்தி அழித்துள்ளன. மேலும் ஹமாஸ் அமைப்பினரின் கமாண்ட் மையங்கள், ஆயுத வளாகங்கள் ஆகியவற்றை இஸ்ரேல் படைகள் முற்றுகையிட்டு கைப்பற்றியுள்ளன. அதுமட்டுமல்லாமல் காசாவின் பெரும்பாலான பகுதிகளில் இஸ்ரேல் படைகள் முன்னேறியுள்ளன என்று இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலண்ட் தெரிவித்தார்.

## வேட்புமனு தாக்கலிலும் விளையாடும் அரசியல் பாகிஸ்தானில் பிந்தும் இம்ரான்கான், முந்தும் நவாஸ் ஷெரீப்



**இஸ்லாமாபாத் : ஜன. 1,**
**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்த இரு மனுக்களையும் அந்நாட்டு தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.**

பாகிஸ்தான் அரசியல் களத்தில் முன்னாள் பிரதமரும், தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கான் புதிய பின்னடைவை சந்தித்துள்ளார். அடுத்தாண்டு அங்கு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக, சிறையில் இருந்தபடி அவர் தாக்கல் செய்த இரு மனுக்களையும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தள்ளுபடி செய்துள்ளது.

71 வயதாகும் இம்ரான்கான் 2022 ஏப்ரலில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது முதல், தொடர்ச்சியான அரசியல் மற்றும் சட்டப் போராட்டங்களில் சிக்கியுள்ளார். 2018 முதல் 2022 வரை பதவியில் இருந்தபோது அவர் இழைத்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு வழக்குகளில் அவர் சிறையில் முடக்கப்பட்டுள்ளார். அரசு பரிசுகளை உரிமையாக்கியது முதல் அரசின் ரகசியங்களை கசிய விட்டு ஆதாயம் அடைந்தது வரையிலான அந்த குற்றச்சாட்டுகளில் சிக்கி, அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

லாகூர் தொகுதியில் போட்டியிட தாக்கலான மனு, அந்தத் தொகுதியின் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இம்ரான் கான் இல்லை என்பதோடு, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் என்பதன் அடிப்படையிலும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அவரது மனுவை நிராகரித்தது.

இதே பிந்தைய காரணத்தின் அடிப்படையில் இம்ரானின் சொந்த ஊரான மியான்வாலியில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இம்ரான்கான் மட்டுமல்ல அவரது கட்சியின் துணைத் தலைவரான ஷா மெஹ்மூத் குரேஷி உட்பட சில மூத்த தலைவர்கள் சமர்ப்பித்த வேட்புமனுக்களையும் தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

இதற்கிடையே, இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதற்காக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தாக்கல் செய்த வேட்புமனுக்களை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டது. சில வாரங்களுக்கு முன்னதாக நவாஸ் மீதான இரு ஊழல் குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் ரத்து செய்திருந்தது. எனினும் பொதுப்பதவியில் இருப்பதற்கு எதிரான வாழ்நாள் தடை உள்ளிட்ட சில வழக்குகளின் விசாரணைகள் நீதிமன்றத்தில் உள்ளபோது, நவாஸின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது தொடர்பாக இம்ரான்கானின் பிடிஐ கட்சியினர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இம்ரான் கானின் இரு மனுக்களும் நிராகரிக்கப்பட்டது அவரது கட்சியினர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இம்ரானின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டது மற்றும் நவாஸ் ஷெரீப்பின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது ஆகியவை தொடர்பாக நீதிமன்றத்தில் முறையிடவும் அவர்கள் தயாராகி வருகின்றனர்.

## பிரதமர் மோடிக்கு புதின் புத்தாண்டு வாழ்த்து



**ரஷியா : ஜன. 1,**
**இந்தியாவுக்கும், பிரதமர் மோடி, ஜனாதிபதி திரவுபதி முர்முக்கு ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:- உலகில் கடினமான சூழ்நிலை இருந்த போதிலும் ரஷியாவுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான கூட்டாண்மை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. வரும் ஆண்டில் சில முக்கிய முன்னேற்றங்கள், இரு தரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுபெறும். பன்முக இரு தரப்பு உறவுகளை வளர்ப்பதற்கும், பிராந்திய மற்றும் உலகளவில் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்க இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு வளர வேண்டும் என்று கூறினார். சமீபத்தில் பிரதமர் மோடியை ரஷியாவுக்கு வருமாறு அதிபர் புதின் அழைப்பு விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் வசிக்கும் தாதா லக்பீர் சிங் தீவிரவாதி

### மத்திய அரசு அறிவிப்பு



**புதுடெல்லி : ஜன. 1,**
**கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் மர்ம நபர்களால் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதற்கு இந்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.**

இந்நிலையில், கனடாவில் வசிக்கும் சட்டவிரோத கும்பல் தலைவன் லக்பீர் சிங் லண்டா (34) தீவிரவாதி என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்ட அறிவிக்கையில், "மர்ம நபர்களால் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், சீக்கியர்களுக்கான நீதி அமைப்பின் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னு, காலிஸ்தான் புலிப்படை உள்ளிட்ட காலிஸ்தான் ஆதரவு அமைப்புகளுடன் லண்டா தொடர்பு வைத்திருந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது.

பப்பர் கல்சா இன்டர்நேஷனல் (பிகேஐ) என்ற காலிஸ்தான் ஆதரவு இயக்கத்தைச் சேர்ந்த லண்டா, பஞ்சாப் மாநிலம் டார்ன் டார்ன் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

## அமெரிக்கா : இந்திய வம்சாவளி தம்பதி, 18 வயது மகள் மர்ம மரணம்



**பாஸ்டன் : ஜன. 1,**
**அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த பெரும் பணக்காரர்களில் ஒருவர் ராகேஷ் கமல் (57). இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.**

இந்நிலையில் ராகேஷ் கமல், அவரது மனைவி டீனா (54), மகள் அரியானா (18) ஆகியோர், டோவர் பகுதியில் உள்ள அவர்களது வீட்டில் சடலங்களாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளனர். பாஸ்டனிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் டோவர் நகரம் அமைந்துள்ளது. இந்த சம்பவம் குடும்ப வன்முறை காரணமாக நிகழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ராகேஷ் கமலின் உடல் அருகே கைத்துப்பாக்கியை போலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

டோவர் மாவட்ட நீதிபதி இந்த சம்பவம் குறித்து, இது ஒரு மிகப் பயங்கரமான சம்பவம் என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு வீட்டைச் சேர்ந்த 3 பேரும் இறந்துவிட்டார்கள் என்றால் யார், இந்த சம்பவத்துக்கு யார் காரணம் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்நிலையில் பிரேதப் பரிசோதனைக்காக 3 பேரின் உடல்களும் அனுப்பப்பட்டுள்ளன.

பிரேதப் பரிசோதனை முடிவுகளுக்காக போலீஸார் காத்திருக்கின்றனர். அந்த முடிவுகள் வெளியானால்தான் இது கொலையா அல்லது தற்கொலை சம்பவமா என்பது தெரிய வரும் என்று போலீஸார் தெரிவித்தனர். பெரும் பணக்காரரான ராகேஷ் கமல் குடும்பத்தாரின் இறப்புக்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

இதனிடையே ராகேஷ் கமல்-டீனா தம்பதியினர், கடந்த சில ஆண்டுகளாக மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்து வந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், குடும்பத்தில் பிரச்சினைகள் இருந்ததாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. 3 பேரும் உயிரிழந்தது தொடர்பாக அவர்களது நெருங்கிய உறவினர்கள், குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகேஷின் மனைவி டீனா, டெல்லி பல்கலைக்கழகத்திலும் பின்னர் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும் படித்தவர் ஆவார். ராகேஷ் கமல், பாஸ்டன் மற்றும் எம்ஐடி ஸ்லோவான் மேலாண்மை கல்வி மையம் மற்றும் ஸ்டான்ட்போர்டு பல்கலைக்கழகத்திலும் பயின்றுள்ளார். மகள் அரியானா கல்லூரியில் படித்து வந்துள்ளார்.

ஆன்லைனில் கல்வி வழங்கும் தனியார் மையத்தில் இவர்கள் பணியாற்றியதாகவும் அதில் பல பெரியபொறுப்புகளை வகித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த சம்பவம் டோவர் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்களது வீடு 50 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ளது என்று கூறப்படுகிறது. பல்வேறு நிறுவனங்களிலும் இவர்கள் முதலீடு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவிய ஏவுகணைகளை மீண்டும் சுட்டு வீழ்த்திய அமெரிக்கா



**வாஷிங்டன் : ஜன. 1,**
**இஸ்ரேல் ராணுவம்- காசாவின் ஹமாஸ் ஆயுதக்குழு இடையிலான போர் கடந்த அக்டோபர் 7-ம் தேதி தொடங்கிது. இந்த விவகாரத்தில் பேசுபொருள் ஆகியிருக்கும் மற்றொரு அமைப்பு ஹவுதி.**

செங்கடலில் இஸ்ரேலை நோக்கிப்பயணிக்கும் அல்லது இஸ்ரேலிலிருந்து பயணிக்கும் சரக்கு கப்பல்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருப்பவர்கள் ஏமனை தலைமையிடமாக கொண்ட இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள்.

உலகின் பிரதான கிழக்கு-மேற்கு வர்த்தக வழித்தடமாக செங்கடல் அமைந்துள்ளது. இந்தச் செங்கடலில் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் சூயஸ் கால்வாயை அணுகுவது பெரும் ஆபத்தாக மாறியுள்ளது. சூயஸ் கால்வாய் வழியாக ஆசியாவுடன் ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் இணைக்கும் முக்கிய வர்த்தகப் பாதையை ஹவுதி அமைப்பினர் சீர்குலைத்துள்ளனர். இந்தப் பாதையையே பல கப்பல்கள் தவிர்க்கத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கும் வழிவகுத்துள்ளது.

இதற்கிடையே, சில தினங்களுக்கு முன் செங்கடல் பகுதியைக் கடந்த ஒரு கப்பல் மீது ராக்கெட் மற்றும் டிரோன் உள்ளிட்ட தாக்குதல்களை ஹவுதி அமைப்பினர் நடத்தினர். அதனை முறியடிக்கும் விதமாக அமெரிக்க ராணுவப் படைகள் சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்காவின் பென்டகன் தெரிவித்தது. இந்நிலையில், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வீசிய ஏவுகணையை அமெரிக்க ராணுவப் படை சுட்டு வீழ்த்தியது. கடந்த 3 நாட்களில் அமெரிக்கா சுட்டு வீழ்த்திய 2வது ஏவுகணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்த ஆண்டில் மேலும் 3 உளவு செயற்கைக்கோள் ஏவ உள்ளோம் : வடகொரியா அதிபர்



**பியாங்யாங் : ஜன. 1,**
**வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை செய்து வரும் நிலையில், தென்கொரியா தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்காவுடன் நட்பு வைத்துள்ளது. இதன் காரணமாக அமெரிக்க போர் கப்பல்கள் கொரிய தீபகற்பத்தில் கால் பதித்துள்ளன.**

அமெரிக்கா - தென்கொரியா இணைந்து எப்போது வேண்டுமென்றாலும் வடகொரியா மீது போர் தொடுக்கலாம் என நினைக்கிறார். இதனால் அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பை முறியடிக்க, தொடர்ந்து தயார் நிலையில் இருக்கும்படி வடகொரிய ராணுவத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே, வடகொரியா சமீபத்தில் ராணுவ உளவு செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியது. இதற்கு தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்நிலையில், வடகொரியா அதிபர் கிம்ஜாங் உன் கூறுகையில், 2024-ம் ஆண்டில் மேலும் 3 ராணுவ உளவு செயற்கைக்கோள்களை ஏவுவோம். அணு ஆயுதங்கள், நவீன ஆளில்லா போர் உபகரணங்களை கட்டமைப்போம். மிகப்பெரிய போர் பதிலடி திறன்களை பெறுவதற்கான பணிகளை விரைவுபடுத்த வேண்டும். எதிரிகளின் எந்த வகையான ஆத்திரமூட்டல் செயல்களையும் அடங்குவதற்கு முழுமையான மற்றும் சரியான ராணுவ தயார் நிலையை பெறவேண்டும் என தெரிவித்தார்.

## உக்ரைன் ஏவுகணை தாக்குதல் ரஷியாவில் குழந்தைகள் உள்பட 18 பேர் பலி



**மாஸ்கோ : ஜன. 1,**
**உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ள ரஷியா, சமீபகாலமாக தீவிரமாக வான் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது. பெரும்பாலான ஏவுகணைகள் உக்ரைன் பகுதியை தாக்குவதால் அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது. மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் படைகள் ரஷியாவுக்கு பதிலடி கொடுத்து வருகின்றன.**

இதற்கிடையே சமீபத்தில் ரஷியா ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலின்போது 122 ஏவுகணைகள் மற்றும் 36 டிரோன்கள் ஏவப்பட்டன. இதில் பொதுமக்கள் 10க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். கீவ் உள்பட 6 நகரங்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், ரஷியாவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக உக்ரைன் ராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ரஷியாவின் பெல்கரோட் நகரில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 2 குழந்தைகள் உள்பட 18 பேர் பலியாகினர் என ரஷிய ராணுவம் தெரிவித்துள்ளது.

## பரவி வரும் ஜே.என்1 கொரோனா
## இதயத்தை பதம் பார்க்கிறது ஜப்பானின் பகீர் எச்சரிக்கை



**ஜப்பான் : ஜன. 1,**
**உலகம் முழுவதும் இப்போது புதிதாகப் பரவிவரும் ஜே.என் 1 கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக இதய செயலிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என ஜப்பான் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலும் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. BA.2.86 அல்லது பைரோலா என்ற ஓமிக்ரான் பாதிப்பில் இருந்து தான் இந்த ஜேஎன் 1 வேரியண்ட் உருவாகியுள்ளது. அமெரிக்காவில் கடந்த செப். மாதம் இந்த புது வகை கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது.


இந்த புதிய ஜேஎன் 1 கொரோனா காரணமாக கடந்த சில வாரங்களாக அமெரிக்கா, பிரிட்டன், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது. இதற்கிடையே கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இதய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஜப்பானைச் சேர்ந்த உயர்மட்ட ஆராய்ச்சி நிறுவனமான ரைகன் ஆய்வாளர்கள் இது குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். கொரோனா வைரஸ் மனிதனின் இதயத்தில் அதிகம் பரவி இதய செயலிழப்பை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளனர். நீண்ட கால கொரோனா பாதிப்பு காரணமாக வரும் காலத்தில் இதய செயலிழப்பு ஏற்படுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து இருப்பதாகவும் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும் ஆறுதல் தரும் விதமாக இதற்கு அறிவியல் பூர்வமான சான்றுகள் இல்லை என்று மறுக்கிறார்கள். ஆனால் நீண்டகால கொரோனா பாதிப்பு நேரடியாக இதயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதற்கு இன்னும் உறுதியான ஆதாரம் இல்லை என்றாலும், மனித இதய திசு மாதிரியைப் வைத்து நடத்தப்பட்ட இந்த சோதனையில் இதற்கான வாய்ப்பு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இப்போது பரவும் கொரோனா பாதிப்பு என்பது அதிகப்படியான இதயப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இது உலகளாவிய சுகாதார பிரச்சினையை ஏற்படுத்தும்" என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

# தெஹ்ரீக் இ ஹுரியத் ஜம்மு காஷ்மீர் அமைப்புக்குத் தடை விதிப்பு





# கனகசபை விவகாரம் : தீட்சிதர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

# கொரோனா பாதிப்பு எண்ணிக்கை கிடுகிடு உயர்வு 8 மாதங்களுக்குப் பின் புதிய உச்சம்




| சென்னை / புதுக்கோட்டை | 01.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

யோசப் பிரான்சுவா தூப்ளே , இந்தியாவின் பிரெஞ்சு குடியேற்றங்களின் தலைமை ஆளுநர் (பி.1697) (இ.1763)



ரி. பி. ஜாயா , இலங்கை கல்வியாளர், அரசியல்வாதி (பி.1890) (இ.1960)



மகாதேவ தேசாய் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1892) (இ.1942)



சத்தியேந்திர நாத் போசு , இந்திய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி.1894) (இ.1974)



## இன்றைய நினைவு நாள்

சி. வை. தாமோதரம்பிள்ளை , ஈழத்து வரலாற்றாளர், பதிப்பாளர் (பி.1832) (இ.1901)



வே. அகிலேசபிள்ளை , தமிழறிஞர், ஈழத்துப் புலவர் (பி.1853) (இ.1910)



சாந்தி சுவரூப் பட்நாகர் , இந்திய வேதியியலாளர் (பி.1894) (இ.1955)



## ஆங்கில புத்தாண்டு நாள்